முச்சந்தி முரளி




Registered as a Newspaper

பக்கங்கள் 16

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 101

புதன்கிழமை
06 மார்ச் 2024

மாசி 23 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

ராஜீவ்காந்தி கொலை வழக்கு

# முருகன், பயஸ், ஜெயக்குமாரின் உயிருக்கு உத்தரவாதமில்லை!

## இந்திய சட்டத்தரணி புகழேந்தி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 6

ராஜீவ்காந்தி கொலைவழக்கில் விடுதலை செய்யப்பட்டு திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏனைய மூவரின் உயிருக்கும் உத்தரவாதம் இல்லையென சட்டத்தரணி புகழேந்தி தெரிவித்துள்ளார். அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறப்பு முகாம் என்பது சிறையைவிட மிகவும் கொடூரமானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

15

## அழுகிய நிலையில் முதியவரின் சடலம்

வவுனியா, மார்ச் 6

வவுனியா - ஓமந்தை, நாவற்குளம் பகுதியில் உள்ள நீர்நிலை

15

## நாவற்குழியில் கைக்குண்டு

யாழ்ப்பாணம், மார்ச் 6

நாவற்குழிப் பகுதியில் நேற்றையதினம் கைக்குண்டொன்று மீட்கப்பட்டுள்ளது.

நாவற்குழியில் அமைந்துள்ள சிவபூமி

15

ராஜீவ்காந்தி கொலைவழக்கு

## எஞ்சியிருக்கும் மூவரையும் விடுவிக்குமாறு உத்தரவிடுக!

### உயர்நீதிமன்றில் தமிழக அரசு கோரிக்கை

புதுடில்லி, மார்ச் 6

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் விடுவிக்கப்பட்டு, திருச்சி சிறப்புமுகாமில் உள்ள முருகன், றொபேட் பயஸ் மற்றும் ஜெயக்குமார் ஆகியோரை இலங்கைக்கு

15

## சுகவீனத்தால் சிசு சாவு!

யாழ்ப்பாணம், மார்ச் 6

சுகவீனமுற்ற நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சிசுவொன்று சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்துள்ளது.

15

## விமானப்படையின் கண்காட்சி இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 6

இலங்கை விமானப்படையின் 73ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு விமானப்படையின் கல்வி மற்றும் தொழில்நுட்பக் கண்காட்சி இன்று புதன்கிழமை யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 10ஆம் திகதிவரை இந்தக் கண்காட்சி இடம்பெறவுள்ளது.

15

## பலாலி ஊடாக விரைவில் மற்றொரு விமான சேவை!

யாழ்ப்பாணம், மார்ச் 6

எதிர்வரும் ஜூன் மாதம் முதல் பலாலி விமான நிலையத்தினூடாக மற்றுமொரு விமான சேவை முன்னெடுக்கப்படவுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

15

## மன்னாரில் விபத்து; அருட்தந்தை சாவு!



மன்னார், மார்ச் 6

மன்னார் - அடம்பன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அடம்பன் நாற்சந்திப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில், மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை மரிசால் டிலான் (வயது-34) உயிரிழந்தார்.

15

## நாடாளுமன்றில் நேற்று சாந்தனுக்கு அஞ்சலி!

கொழும்பு, மார்ச் 6

ராஜீவ்காந்தி கொலைவழக்கில் கைது செய்யப்பட்டு, சிறப்பு முகாமில் உயிரிழந்த சாந்தனுக்கு, இலங்கை நாடாளுமன்றத்தில் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே சாந்தனுக்குத் தனது அஞ்சலியைச் செலுத்தினார்.

தொடர்ந்து உரையாற்றிய

15







மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவிபுரம் பாடசாலையில்

# இடிந்துவிழும் நிலையில் கூரை பயத்துடன் கற்கும் மாணவர்கள்

## அதிகாரிகள் அசண்டை

**முல்லைத்தீவு, மார்ச் 6**

**முல்லைத்தீவு - தேவிபுரம் பாடசாலையின் கூரையின் மரங்கள் எந்த நேரத்திலும் இடிந்துவிழும் அபாயநிலையில் சேதமடைந்து காணப்படுகின்றன என்று பாடசாலை வட்டாரம் தெரிவித்துள்ளது.**

பாடசாலையின் பழைய மாணவர் சங்கக் கூட்டம் அண்மையில் பாடசாலை அதிபர் பு.சற்குணசீலன் தலைமையில் நடைபெற்ற போதே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது. பாடசாலையின் இந்தக் கூரை 2010 ஆம் ஆண்டின் பின்னர் அமைக்கப்பட்டது. பாடசாலைக் கட்டட வேலைகளில் ஈடுபட்ட ஒப்பந்தகாரர்கள் தரங்குறைந்த மரங்களைப் பயன்படுத்தியதால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால் அச்சத்துடனேயே கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதுதொடர்பில் புதுக்குடியிருப்பு கல்விக் கோட்டம், முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிமனை என்பவற்றுக்குச் சுட்டிக்காட்டியபோதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதுதொடர்பில் துறைசார் திணைக்களங்களுக்கு மீண்டும் கடிதங்கள் அனுப்பிவைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ச-13)

# ராஜீவ் கொலை வழக்குக்கும் சாந்தனுக்கும் தொடர்பில்லை

## சட்டத்தரணி புகழேந்தி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 6

ராஜீவ்காந்தி கொலை வழக்குக்கும் சாந்தன் தரப்பினருக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்று நீதிபதிகளில் ஒருவர் தீர்ப்பு வழங்கியபோதும் அது நிராகரிக்கப்பட்டது என்று சாந்தனின் சட்டத்தரணி புகழேந்தி தெரிவித்துள்ளார்.

தமிழகத் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்த சாந்தனின் இறுதி அஞ்சலியில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ராஜீவ்காந்தி கொலைவழக்கில் இரண்டாவது குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டு சாந்தன் கிட்டத்தட்ட 32 ஆண்டுகளுக்கு மேலாக சிறையிலே அடைக்கபட்டிருந்தார். இந்த வழக்கில் அவர் மீதான குற்றச்சாட்டுகள் அப்பட்டமான பொய் என்பதற்குப் பல்வேறு எடுத்துக்காட்டுகள் உள்ளன.

சாந்தன் சம்பவ இடத்துக்குச் சென்றார் என்ற குற்றச்சாட்டு இல்லை. சாந்தன் சம்பவ நேரத்தில் சென்னையில் இருந்தார் என்று இந்த வழக்கின் புலனாய்வு அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கின்றார். தீர்ப்பு வழங்கிய நீதிபதிகளில் ஒருவர், தூக்குத்தண்டனை வழங்கப்பட்டவர்களுக்கும், இந்த சம்பவத்துக்கும் சம்பந்தம் இல்லை, நான் விடுதலை செய்கின்றேன் என்று கூறினார். ஆனால் பெரும்பான்மையின் அடிப்படையில் ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது - என்றார். (எ-இ)



# டிப்பரில் மறைத்துக் கடத்திய பாலைமரக் குற்றிகள் மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 6

பாலைமரக் குற்றிகளைக் கடத்திச் சென்ற குற்றச்சாட்டில் ஒருவர் சாவகச்சேரிப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டதுடன், கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட டிப்பர் வாகனமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

டிப்பர் வாகனத்தில் மண்ணுக்குள் மறைத்துக் கடத்தப்பட்ட 146 பாலை மரக்குற்றிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு, விசுவமடுவில் இருந்து கொண்டுவரப்பட்ட இந்த மரக்குற்றிகள், சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொலிஸ் பரிசோதகர் பொ.ஜெயரூபன் தலைமையிலான பொலிஸ் குழுவால் கைதடிப் பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-27)

# உடைமையில் கசிப்பு; பெண் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 6

உடைமையில் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் 28 வயதுப் பெண் ஒருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், சந்தேகநபர் உரும்பிராய் செல்வபுரம் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடம் இருந்து 20 லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-23)

# போர் முடிவடைந்த பின்னரும் தொடரும் காணி அபகரிப்பு!

## மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் சுட்டிக்காட்டு

மன்னார், மார்ச் 6

போர் முடிவடைந்தாலும் மன்னார் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில், பல்வேறு வடிவங்களில் காணிகள் ஆக்கிரமிக்கப்படுகின்றன என்று மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிறாடோ சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் இராணுவம், கடற்படை மற்றும் ஏனைய திணைக்களம் வசம் இருக்கும் மக்களின் காணிகளை விடுவிக்கவேண்டும் என்று தபால் மூலம் ஜனாதிபதிக்கு கோரிக்கை அனுப்பும் நிகழ்வு நேற்று முன்தினம் மன்னாரில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மக்களின் காணிகளை அரசாங்கமும், முப்படையினரும் கையகப்படுத்தி வணிகச் செயற்பாடுகள், விவசாயச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். ஆனால் காணிக்குச் சொந்தக்காரரான மக்கள் காணிகள் இன்றி வாடகை வீடுகளில் வசிக்கின்றனர். எமது காணிகளை விடுவிக்கக்கோரி பல்வேறு விதமான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அவற்றின் ஒரு வடிவமாக ஜனாதிபதி செயலகத்துக்கு 5 ஆயிரம் தொடக்கம் 10 ஆயிரம் தபால் அட்டைகள் அனுப்பப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார். (எ-56)

# வீதியோர தேக்கமரங்களை வெட்டிச் சாய்த்த விஷமிகள்!

முல்லைத்தீவு, மார்ச் 6

மன்னார் - மடுவில் வீதியோரம் வளர்ந்த தேக்குமரங்களை இனந்தெரியாதவர்கள் வெட்டிச் சாய்த்து குற்றிகளாக்கி வாகனத்தில் ஏற்றிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த 3 ஆம் திகதி இரவு இடம்பெற்றுள்ளது. மடு தேவாலயத்துக்கு சில கிலோமீற்றர் தூரத்தில் வீதியோரம் ஓங்கி வளர்ந்திருந்த பெறுமதியான தேக்கு மரங்களே மர்மநபர்களால் வெட்டி எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

இதேவேளை, இந்தப் பகுதிக்கு அண்மையில் இராணுவ முகாம் மற்றும் மடு பொலிஸ் நிலையம் என்பன அமைந்துள்ளபோதும் மரங்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (ச-56)





# கடல் வளங்கள் அழிப்பு; புங்குடுதீவில் போராட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 6

புங்குடுதீவில் கடல் வளங்களையும் கடற்றொழிலாளர்களையும் அழிக்கும் சட்டவிரோத கடலட்டைப் பண்ணைகளையும் இழுவைமடி மீன்பிடியையும் எதிர்த்து போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. தீவக சிவில் சமூகத்தின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

போராட்டத்தில் தீவக சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் , தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராஜா தமிழரசுக் கட்சியின் செயற்பாட்டாளர்கள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி க.சுகாஷ் உட்பட பலர் பங்கேற்று எதிர்ப்பு வெளியிட்டனர். (ச-125)

# குருநகரில் மூவர்; டெங்கால் பாதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 6

அரியாலை, குருநகர் பிரதேசங்களில் மூவர் டெங்கு நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

டெங்கின் தாக்கம் அதிகம் காணப்படும் இடங்களில் அதற்கான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் சுகாதாரப் பிரிவினர் குறிப்பிட்டனர். (ச-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14 ஆண்டுகள் பேருந்துக்காக காத்திருக்கும் கிராமங்கள்!

**கொழும்பு, மார்ச் 6**

**முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பகுதிகளுக்கு போர் நிறைவுற்று 14 ஆண்டுகள் கடந்தபோதிலும் பேருந்துச் சேவை சீராக நடைபெறுவதில்லை என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

மாந்தை கிழக்குக் கிராமங்களுக்கு 1990ஆம் ஆண்டுக்கு முன்னர் பேருந்துச் சேவை நடைபெற்றது. இந்தச் சேவையால் நட்டாங்கண்டல் அ.த.க.பாடசாலை, பாண்டியன்குளம் மகா வித்தியாலயம், பாலிநகர் மகா வித்தியாலயம், கொல்லவிளாங்குளம் அ.த.க. பாடசாலை, அம்பாள்புரம் அ.த.க. பாடசாலை, வன்னிவிளாங்குளம் அ.த.க. பாடசாலை, மாங்குளம் மகா வித்தியாலய மாணவர்கள் உள்ளிட்ட பலர் நன்மையடைந்தனர்.

இந்த நிலையில் போர் நிறைவுபெற்று 14 ஆண்டுகள் கடந்தபோதிலும் பேருந்து சேவைகள் ஒழுங்காக நடைபெறாத நிலைமை காணப்படுகின்றது. துறைசார் அதிகாரிகள் இது தொடர்பில் நடவடிக்கை எடுத்து பேருந்துச் சேவை யை நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ச-13)

## சுற்றுலாப் பயணிகள் வர்த்தக நடவடிக்கை

*உள்ளூர் வியாபாரிகள் விசனம்*

யாழ்ப்பாணம், மார்ச் 6

ரஷ்ய,உக்ரைன், இஸ்ரேல் நாடுகளிலிருந்து சுற்றுலா விசாவில் வரும் உல்லாசப்பயணிகள், தென்னிலங்கையில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் என்று உள்ளூர் வர்த்தகர்கள் குற்றஞ் சுமத்தியுள்ளனர்.

அவர்களால் ஹோட்டல்கள், சிறு வர்த்தக நிலையங்கள், உணவகங்கள், முச்சக்கர வண்டி சேவைகள், வாடகைக்கு மோட்டார் சைக்கிள் வழங்குதல், உல்லாசப்பயண வழிகாட்டல் சேவைகள் போன்றவை நடத்தப்படுகின்றன.

தமது வர்த்தக நிலையங்களை அவர்கள் பதிவு செய்யவுமில்லை, வரி செலுத்துவதுமில்லை. இதனால் உள்ளூர் வர்த்தகர்களுக்கும் அவர்களுக்குமிடையே மோதல் நிலை உருவாகும் சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

எனவே சுற்றுலா விசாவில் வந்து, வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் உள்ளூர் வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ள னர். (ச-6)

## ரணில் - சஜித் இணைய இந்தியா, அமெ. முயற்சி

கொழும்பு, மார்ச் 6

ரணில் விக்கிரமசிங்கவையும், சஜித் பிரேமதாஸவையும் இணைப்பதற்கு இந்தியாவும், அமெரிக்காவும் முயற்சித்துவருகின்றன என்றுதேசியசுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

சஜித் ஜனாதிபதி, ரணில் பிரதமர் என்ற கோரிக்கையுடன் இதற்கான ஏற்பாடு இடம்பெறக்கூடும். இவை இரண்டில் ஒன்று நடக்கலாம். அது நடக்காமலும் போகலாம். ஆனால் அதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

பூகோள அரசியலில் அமெரிக்காவும், இந்தியாவும் இன்று இணைந்து செயற்பட்டுவருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

## தீர்வையற்ற வாகனங்கள் தகவல்கள் இல்லையாம்

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட தீர்வையற்ற வாகனங்கள் தொடர்பான பல தகவல்கள் தம்மிடம் இல்லை என்று நாடாளுமன்ற செயற்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

ஆங்கில ஊடகமொன்று, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட தீர்வையற்ற வாகனங்கள் தொடர்பில், தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் ஊடாகச் சில கேள்விகளைக் கேட்டிருந்தது. இவ்வாறு கேட்கப்பட்ட கேள்விகளில், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தீர்வையற்ற வாகனங்கள் வழங்கும் நடைமுறை வந்தபின்னர் எத்தனை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன? நாடாளுமன்ற உறுப்பினர்களில் எத்தனைபேர் ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட அனுமதிப் பத்திரங்களை வைத்திருக்கின்றனர்? உள்ளிட்ட கேள்விகளுக்குப் பதில் வழங்க மறுத்துள்ள நாடாளுமன்றச் செயற்குழு, அந்தத் தகவல்கள் தம்மிடம் இல்லை என்பதைப் பதிலாக வழங்கியுள்ளது. (ம-6)



## எதிரணியில் அமரும் திட்டம் வதந்தி என்கின்றார் நாமல்

40 நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் தான் எதிரணியில் அமர திட்டமிட்டுள்ளார் என்று வெளியாகும் தகவல்களில் உண்மை இல்லை என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார். நாமல் ராஜபக்ச தலைமையிலான மொட்டுக் கட்சி குழுவொன்று எதிரணிக்கு செல்லவுள்ளது எனவும், அதன்பின்னர் எதிர்க் கட்சித்தலைவர் பதவியை கைப் பற்றுவதற்கு வியூகம் வகுக்கப்படும் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ள நிலையிலேயே நாமல் ராஜபக்ச மேற்கண்டவாறு கூறியுள்ளார். பெரமுனக் கட்சிக்கு மக்கள் வழங்கிய ஆணையிலேயே இந்த அரசின் இருப்புதங்கியுள்ளதுனவும், எனவே, மக்கள் ஆணைக்கு புறம்பாகச் செயற்படத் தயாரில்லை என்றும் நாமல் ராஜபக்ச குறிப்பிட்டுள்ளார் . அதே வேளை, எந்தத் தேர்தல் நடைபெற்றாலும் அதனை எதிர்கொள்வதற்குத் தயார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-44)

## புதினம் தெரியுமோ?

'ஆசைப்பட்ட எல்லாத்தையும் காசிருந்தால் வாங்கலாம்' எண்டொரு பாட்டுக் கேட்டிருப்பியள். ஆனால் சில விசயங்களைக் காசு குடுத்தாலும் வாங்கேலாத நிலைமை முந்தி இருந்தது. இப்ப அதுகளையும் விக்கத் தொடங்கியிருக்கினம். கொஞ்சநாளைக்கு முதல் 'கலாநிதி', தேசமான்ய, 'தேசபந்து' எண்ட பட்டங்களை மலிவு விலையில சிலர் வித்துத் திரிஞ்சவை. இப்பவும் வித்துக்கொண்டுதான் இருக்கினம், அதை உண்மையான பட்டங்கள் எண்டு நினைச்சு கனபேர் வாங்கிக் கொண்டுமிருக்கினம். ஆனால், அப்பிடிப் பட்டங்களை விக்கிற 'பல்கலைக்கழகங்கள்' எங்க பதிவு செய்யப்பட்டிருக்கு எண்டு தேடினால், அப்பிடியொரு பல்கலைக்கழகமே உலகத்தில இல்லை எண்ட விடைதான் கிடைக்கும். பட்டங்களை வித்து முடிஞ்சு, இப்ப லேட்டஸ்ட்டா இன்னொரு யாவாரத்தைச் சிலர் தொடங்கியிருக்கினம். அது, உலக சாதனையை விக்கிற யாவாரம்.

கையில காசு, வாயில சாதனைப் பதிவு எண்டமாதிரி காசு குடுத்தால் அதை உலக சாதனை எண்டு இவை அறிவிப்பினமாம். உலகத்தில எல்லாரும் ஏற்றுக்கொண்ட சாதனைப் புத்தகம் எண்டால் அது 'கின்னஸ்' தான். அதுக்குத்தான் மரியாதையும் இருக்கு. கின்னஸை மாதிரி வேற சிலரும் அப்பிடி சாதனைப் புத்தகங்களை நடத்தினாலும், அதுகள் அவ்வளவு எழுப்பமுமில்லை, அதை ஆக்கள் மதிக்கிறதுமில்லை. அப்பிடி கின்னஸைக் கொப்பியடிச்சு, சிலர் வெளிக்கிட்டிருக்கினம். முக்கியமாக இந்தியாவில இருந்து வந்த இந்தக் கும்பலுக்கு காசைக் குடுத்தால் காணும். தோசை திண்டு சாதனை, வாகனத்துக்குப் பின்னால ஓடிச் சாதனை, நித்திரை கொள்ளுறதில சாதனை எண்டு இல்லாத சாதனையளையெல்லாம் சொல்லி, அதைச் செய்யிறவையையும் ஒரு உலக சாதனையாளர் எண்டு நம்பவைச்சுக் காசு கறக்கினம். இந்தியாவில நடக்கப்போற யோகாசன புரோக்கிராமில கலந்துகொள்ளுற எல்லாருக்கும் உலகசாதனை செய்த சேர்ட்டிபிக்கட்டும், மெடலும் தாறம், காசைக் கட்டுங்கோ எண்டு கூவிக் கூவி விளம்பரம் செய்யினம்.

உலகசாதனையைப் பதியிறதெண்டால் அதுக்கு ஆயிரத்தெட்டு நடைமுறையள் இருக்கு. அதொண்டுமில்லாமல் சும்மா வாறவை போறவை எல்லாம், 'உலகசாதனை' எண்டு சொன்னால் கேக்கிறவை என்ன கேனையரோ? அதிலையும் இப்பிடி உலகசாதனையை பிஸ்னஸ் செய்யிறவைக்கு ஒழுங்கா தங்களுக்கெண்டு கொம்பனியின்ர பேரில ஒரு ஈமெயில்கூட இல்லை. கூகிள்காரன் இலவசமாகக் குடுத்த 'ஜீமெயில்ல' தான் அவையின்ர யாவாரம் நடக்குது. அந்த லட்சணத்தில அவை உலக சாதனை எண்டு உறுதிப்படுத்தி, அதைத் தங்கட புத்தகத்தில பதியப்போயினமாம். உவையள் உலகசாதனையளைப்பதியினம் எண்டால், அதைப்புத்தகமாக அச்சடிச்சு விட்டிருக்க வேணுமெல்லோ. அப்பிடி அவை விட்ட உலக சாதனைப் புத்தகமேதும் இருக்கோ எண்டு கேட்டால், அதுக்கும் மழுப்புகினம், தலையைச் சொறியினம். ஆனால் 'எங்கட கொம்பனியைப் பற்றி பிழையா ஆரும் சொன்னால் சட்டநடவடிக்கை' எடுப்பம் எண்டு வெருட்டு வேற. ஆனால் அப்பிடி அவை சட்டநடவடிக்கைக்குப் போனால், முதல்ல இவைதான் மோசடி செய்ததுக்கு மாட்டுப்படுவினம் எண்டது தெரியாது போல.

உண்மையில இப்பிடி உலகசாதனை செய்ய ஆசைப்படுறவை 'கின்னஸ்'காரரோட தொடர்பு கொண்டால்,அவங்களே வந்து இலவசமா உங்கட சாதனையளைப் பதியிற வசதி இப்ப எல்லா நாட்டிலையும் இருக்குது. அதைவிட்டிட்டு இப்பிடி மோசடிக் காரர் தாற 'உலகசாதனையை' பெருமையா நினைக்கிறவையையும் சனம் பேய்க்காட்டுக்காரர் எண்டு சொல்லிப்போடும் கவனம்.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்வல்லுநர் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 6
வயாவிளான் மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி, கல்லூரி மைதானத்தில் முதல்வர் வே.த.ஜயந்தன் தலைமையில் இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஞானலிங்கம் ஆதவன், தெல்லிப்பழை கோட்டக்கல்வி அதிகாரி வேலாயுதர் அரசகேசரி, வலிகாமம் கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சிவலிங்கம் முரளிதரன், வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் நடராஜா கஜேந்திரன், பழைய மாணவன் அப்புத்துரை பாலகிருஷ்ணன் எனப் பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (ப)

++++

யாழ்ப்பாணம், மார்ச் 6
மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் கல்லூரி மைதானத்தில் நாளை வியாழக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு நடைபெறவுள்ளன. அதிபர் திருமதி லலிதாமலர் முகுந்தன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக மன்னார் மாவட்ட செயலர் க.கனகேஸ்வரன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் மு.ஜெகதாசன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ப-9)

++++

யாழ்ப்பாணம், மார்ச் 6
யாழ்.இராமநாதன் கல்லூரியின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டிகள் கல்லூரியின் அதிபர் திருமதி அம்பிகை சிவஞானம் தலைமையில் இன்று புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சுன்னாகத்திலுள்ள கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளன. நிகழ்வில் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (எ-66)

# அக்கராயன் கிழக்குக்கு பேருந்துச்சேவை தேவை

## பிரதேச மக்கள் கோரிக்கை

**வன்னேரிக்குளம், மார்ச் 6**

**கிளிநொச்சி அக்கராயன் கிழக்குக்கு பேருந்துச் சேவைகள் நடத்தப்படவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இது தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் மேலும் தெரிவித்ததாவது:-

கிளிநொச்சி மேற்குக்கான பேருந்துச் சேவைகள் கிளிநொச்சியிலிருந்து ஆரம்பித்து கோணாவில், ஸ்கந்தபுரம், அக்கராயன் வழியாக முழங்காவில் வரை நடைபெறுகின்றது. கோணாவிலில் இருந்து யூனியங்குளம், அக்கராயன் கிழக்குப் பகுதிகளுக்கான பேருந்து சேவைகள் இடம்பெறாததன் காரணமாக அந்தப் பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் அந்தப் பகுதிகளில் உள்ள மருத்துவமனைகளுக்குக்கூட நடந்துசெல்ல வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. அக்கராயன் கிழக்கு, யூனியங்குளம் பகுதி மாணவர்கள் அக்கராயன் மகா வித்தியாலயத்துக்கு வருகை தருவதற்கு 3 கிலோமீற்றர் தூரத்துக்கு நடந்து செல்ல வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் அக்கராயன் கிழக்குக்கான பேருந்துச் சேவைகள் ஒழுங்காக நடைபெற்றன. தற்போது அக்கராயன் கிழக்குக்கான வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ள போதிலும் பேருந்துச் சேவைகள் நடைபெறுவதில்லை. இந்த நிலையில் அக்கராயன் கிழக்குக்கான பேருந்துச் சேவைகளை நடத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர். (ம-13)

# விருதுகளுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்., மார்ச் 6
இந்த வருடத்துக்குரிய கலைக்குரிசில் மற்றும் இளங்கலைஞர் ஆகிய விருதுகளுக்குத் தகுதியுடைய பிரதேச கலைஞர்களிடமிருந்து, வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களைத் தத்தமது பிரதேச செயலக கலாசாரப் பிரிவுகளில் பெற்று அவற்றை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-9)



யாழ்.நீர்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் அதிபர் சின்னத்தம்பி தர்மரத்தினத்தின் மணி விழா, கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை தலைமையில் கடந்த 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பாடசாலையின் மண்டபத்தில் இடம்பெற்றது. (எ-66)

# உணவு கையாள்வோருக்கு இன்று மருத்துவச் சான்றிதழ்

சாவகச்சேரி, மார்ச் 6
சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில், உணவு கையாளும் நிலையங்களிலும், பாடசாலைகளிலும் 2024 ஆம் ஆண்டுக்குரிய மருத்துவச் சான்றிதழ்களின்றி சமையல் பணியில் ஈடுபடுவோருக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர் அறிவித்துள்ளனர்.

இந்தப் பகுதிகளிலுள்ள உணவு கையாளும் நிலையங்களிலும் பாடசாலைகளிலும் சமையலில் ஈடுபடுவோருக்கு இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு சான்றிதழ் வழங்கப்படவுள்ளது எனவும் தெரிவித்துள்ளனர். (ப-9)



# வடமாகாண ஆளுநருடன் யு.ஏ.ஈ. தூதுவர் சந்திப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 6
வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் மற்றும் ஐக்கிய அரபு இராஜியத்தின் இலங்கைக்கான தூதுவர் எச்.ஈ.கலிட் நாசர் சுலைமான் அல்அமீரி ஆகியோருக்கிடையே சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியொன்றில் இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படக்கூடிய முதலீடுகள் தொடர்பாக இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் சவால்கள், காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள் போன்ற விடயங்களும் கலந்துரையாடப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண அபிவிருத்திகளுக்காக தொடர்ச்சியாக ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று ஐக்கிய அரபு இராச்சியத்தின் இலங்கைக்கான தூதுவர் வடக்கு ஆளுநருக்கு உறுதியளித்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-26)



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாண விவசாய அமைச்சின் உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாம் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலைய மாநாட்டு மண்டபத்தில் நடந்த நிகழ்வில் பங்கேற்று பலர் குருதிக்கொடையளித்தனர். (எ-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**இலங்கை விமானப்படை இந்தவருடம் 73 ஆவது ஆண்டு விழாவை யாழ்ப்பாணத்தில் கொண்டாடு கின்றது. வானவேடிக்கைகள், சாகசங்கள், கண்காட்சிகள் என்பன யாழ்.முற்றவெளியில் இன்று ஆரம்பமாகின்றன. இதுகுறித்து விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ உதயனுக்கு வழங்கிய நேர்காணல் இங்கு பிரசுரமாகின்றது.**

## ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கு இணையாக

# யாழ்ப்பாணத்தில் இம்முறை விமானப்படையின் கொண்டாட்டம்!



**கே: 73 ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் இலங்கை விமானப்படை இதுவரை கடந்து வந்த பாதைகள் பற்றிக் குறிப்பிட முடியுமா?**

**ப:** இலங்கையின் விமானப் படை நீண்ட வரலாற்றைக் கொண்டது. 'ரோயல் இலங்கை விமானப்படை' என்ற பெயரில் 1951 மார்ச் 02 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 1972 இல் இலங்கை குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டதும் 'இலங்கை விமானப் படை' என நாடாளுமன்றத்தின் ஊடாக அங்கீகரிக்கப்பட்டது.

எமது படையினர் தமது விசேட திறமைகளை பல மட்டங்களில் வெளிப்படுத்தியுள்ளனர். குறிப்பாக அரசாங்க நிறுவனங்களுக்கு மத்தியில் நடத்தப்பட்ட போட்டிகளில் தேசிய உற்பத்தி திறன் விருது. தர விருது என்பவற்றைப் பல வருடங்கள் நாம் வென்றெடுத்துள்ளோம். அதே போன்று உலகின் ஏனைய விமானப் படைகளோடு பயிற்சிகளை நடத்துகிறோம்.

**கே: விமானப்படையின் 73 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்கள் எவை?**

**ப:** கல்வி மற்றும் சமூக சேவை வேலைத்திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து 73 ஆவது ஆண்டு விழாவை கௌரவமான முறையில் யாழ்ப்பாணத்தை மையப்படுத்தி சிறப்பாக நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதன் ஊடாக தொழில்நுட்ப அறிவை பெற்றுக்கொடுப்பதோடு. விமானப்படை குறித்த சரியான தெளிவை வழங்கவும் எதிர்பார்த்துள்ளோம். ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கு இணையாக எமது பணிகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

கல்வி மற்றும் சமூக சேவை வேலைத்திட்டங்கள் பல முன்னெடுக்கப்படவிருக்கின்றன. இந்த வேலைத்திட்டங்களுக்காக 125 மில்லியன் ரூபாவுக்கு மேல் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த சமூக சேவை வேலைத்திட்டங்களுக்கு 'நட்பின் சிறகுகள்' எனப் பெயரிட்டுள்ளோம். கடந்த வருடங்களில் விமானப்படையினர் தினம் கொழும்புக்குள்ளேயே மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருந்தது. இம்முறை வடக்கையும் தெற்கையும் இணைக்கும் வகையில் யாழ்ப்பாணத்தில் இவ்விழா நடத்தப்படுகிறது.

இவ்விழாவை சிறப்பாக நடத்தவென பெருந்தொகை நிதி செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ள போதிலும் அதில் சிறுதொகை கூட அரசிடமிருந்தோ விமானப்படை மூலமோ ஒதுக்கீடு செய்யப்படாது என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இவ்விழாவை சிறப்பாக நடத்த அனுசரணையாளர்கள் முன்வந்துள்ளனர். நிச்சயம் இவ்விழா மிகவும் வெற்றிகரமாக அமையும்.

**கே: யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடமாகாணத்தை அடிப்படையாகக் கொண்டு என்னென்ன நிகழ்வுகளை ஒழுங்கமைத்துள்ளீர்கள்?**

**ப:** இவ்விழாவுக்காக சர்வமத சமய நிகழ்ச்சிகளை நடத்துவதற்கும் ஏற்பாடுகளைச் செய்துள்ளோம். அதற்கு இணையாக ஏனைய சமய நிகழ்ச்சிகளும் முன்னெடுக்கப்படும். அதனைத் தொடர்ந்து வடக்கு - தெற்கு ஒத்துழைப்பை இலக்காகக் கொண்ட 'நட்புறவின் சிறகுகள்' வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படும். யாழ்ப்பாணம், முற்றவெளி விளையாட்டரங்கில் இடம்பெறும் இந்நிகழ்ச்சிகளுக்கு வடக்கு சகோதரர்கள் மற்றும் இராணுவத்தினர், கடற்படையினர், பொலிஸார், பெருந்தொகையான அரச நிறுவனங்கள் ஒத்துழைப்புகளை நல்க உள்ளன. இதற்காக பல வேலைத்திட்டங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் கல்வி அமைச்சின் அங்கீகாரத்துடன் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 73 பாடசாலைகளில் 100 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படும். 'வடக்குக்கு என்னால் புத்தகம்' என்ற வேலைத்திட்டத்தின் கீழ் 73 ஆயிரம் தமிழ், ஆங்கில மொழிப் புத்தகங்களை பகிர்ந்தளிக்கவென 25 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் நோக்கில் வட மாகாணத்திலுள்ள பல பிரதேசங்களிலும் அப்பிரதேசங்களுக்கு பொருத்தமான 73 ஆயிரம் மரக்கன்றுகளும் நடப்படும்.

**கே: இவ்விழாவின் தனித்துவமான நிகழ்வாக எதனைக் கருதுகிறீர்கள்?**

**ப:** விமானப்படை சைக்கிளோட்டத்தைச் சொல்லலாம், இது 25 ஆவது தடவையாக நடத்தப்படுகிறது. மார்ச் 3 ஆம் திகதி ஆரம்பமாகிய இந்தப் போட்டி மார்ச் 07 ஆம் திகதியுடன் நிறைவடையும். கடந்த காலங்களில் இந்தப்போட்டி மூன்று நாள் நிகழ்வாக இடம்பெற்றது. இம்முறை இப்போட்டி ஐந்து நாள் நிகழ்வாக இடம்பெறுகிறது. ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டியில் 100க்கு மேற்பட்ட வீரர்களும். மகளிருக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியில் 40 போட்டியாளர்களும் பங்குபற்றுகின்றனர்.

மேலும் பொலநறுவை, திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இசைக் கச்சேரிகளை நடத்தவும் ஏற்பாடுகளைச் செய்துள்ளோம். அதேபோன்று நான்கு மாவட்டங்களை இணைத்து விமானப் படைத் தளபதி கிண்ணத்துக்கான சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டியும் ஆரம்பமாகியுள்ளது இப்போட்டிகளில் 11 விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றின . வடக்கில் பெரும்பாலான மக்கள் உதைபந்தாட்டப் போட்டிகளில் அதிக விருப்பம் கொண்டவர்களாவர். இதன் இறுதிப்போட்டிதுரையப்பாவிளையாட்டரங்கில்மார்ச் 06 ஆம் திகதி (இன்று)இடம்பெறும்.

அதேநேரம் யாழ்ப்பாணத்தில் வான் சாகசம் 2024 (Air Tattoo 2024) கல்வி, தொழில்நுட்ப மற்றும் வர்த்தக கண்காட்சி என்பன முற்றவெளி விளையாட்டரங்கில் இன்று மார்ச் 06 தொடக்கம் 10வரை நடத்தப்படும். பாடசாலைகள், கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் என்பவற்றுக்கு நாம் இந்த நிகழ்வுகளுக்காக அழைப்பு விடுத்துள்ளோம். அதேநேரம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு விமானத்தின் கேஸ் டேர்பைன் ( gas Turbine) இயந்திரம் ஒன்றை வழங்கவும் எதிர்பார்த்துள்ளோம்.

இவ்விழாவின் பிரதான வைபவங்கள் யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு இடம்பெற்றாலும் நாடெங்கிலும் அமைந்துள்ள விமானப்படை முகாம்களிலும் விசேட நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

**கே: இலங்கை விமானப்படையினர் தற்போது நாட்டின் அபிவிருத்திக்கு எவ்வாறு பங்களிக்கின்றனர் ?**

**ப:** கடந்த காலகட்டத்தில் இலங்கை பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டது . அப்போது எமது நாட்டுக்கு பொருளாதார ரீதியில் பங்களிக்கும் வகையில் பல பணிகளை இலங்கை விமானப்படை மேற்கொண்டது. குறிப்பாக இலங்கை விமானப்படையின் எம்.ஐ. 17 ரக ஹெலிகொப்டர்கள் மற்றும் விமானப் படையினர் ஐக்கிய நாடுகளில் அமைதி காக்கும் படைபிரிவில் பணியமர்த்தப்பட்டதன் மூலம் இதுவரை சுமார் 100 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் மேற்பட்ட வருமானத்தை எமது நாட்டுக்காக ஈட்டி கொடுத்துள்ளோம். மேலும் எதிர்காலத்தில் இது போன்ற பணிகளை மேற்கொள்வதன் மூலம் எமது நாட்டுக்கு அந்நியச்செலாவணி கிடைக்கப்பெறும். மேலும் கடந்த காலத்தில் வடமாகாணத்தில் பல புனரமைப்பு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தினோம். நாட்டின் சமூக, பொருளாதார அபிவிருத்திக்காக நாம் எங்களது சக்தியைப் பயன்படுத்துகிறோம். மக்களின் அறிவையும் கல்வி ஞானத்தையும் மேம்படுத்தவும் நாம் பங்களிப்புகளை நல்குகின்றோம். பிரிவினைகளுடன் நாம் முன்னோக்கிப் பயணிக்க முடியாது. அதனால் இந்நாட்டிலுள்ள அனைத்து இனமக்களும் ஒற்றுமையாக ஒன்றிணைந்து செயற்படுவது அவசியம். அதனுடாக சமூக அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்துமீறிய மீன்பிடியை கட்டுப்படுத்துமாறு போர்



யாழ்ப்பாணம், மார்ச் 6

**இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களை தடுத்து நிறுத்த வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் மீனவர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

வடமாகாணக் கடற்றொழிலாளர் இணையம் மற்றும் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் மற்றும் இலங்கை மீனவர் மக்கள் தொழிற்சங்கம் உள்ளிட்ட மீனவ அமைப்புகள் இணைந்து யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம் முன்பாக நேற்றுக்காலை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் தொடர்ச்சியாக யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத்தூதரகத்தை நோக்கி அவர்கள் பேரணியாகச் சென்றனர். எனினும், மீனவர்கள் தூதரகத்தை முற்றுகையிட விடாதவாறு பொலிஸார் பாதுகாப்புக் கெடுபிடிகளை அதிகரித்தனர். மீனவர்களின் பிரதிநிதிகள் எட்டுப்பேர் மட்டும் துணைத்தூதரகத்துக்குள் அனுமதிக்கப்பட்டதையடுத்து அவர்கள் தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவை அங்கு கையளித்தனர். இந்திய- இலங்கை அரசுகளுக்கு எதிராக மீனவர்கள் தொடர்ச்சியாகக் குரலெழுப்பினார்கள். (ம-26)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 06 . 08 . 1997

மறைவு 16 . 02 . 2023



**பாலச்சந்திரன் பிரதீப்**

நீ வளமோடு வாழ்வாய்
என வாஞ்சையுடன் நாங்கள் கண்ட கனவு ஏராளம்...!

கண் மூடி விழிப்பதற்குள்
கணப்பொழுதினில் நடந்தவைகள் நிஜம் தானா என்று
நினைக்கும் முன்னே மறைந்தது ஏனோ?

உன் சிரிப்பை நாம் ரசித்த போதெல்லாம்
தெரியவில்லை எம் மொத்தச் சிரிப்பையும் நீ
எடுத்துச் செல்வாய் என்று!

நான் பார்க்கும் திசையெல்லாம் உன் உருவே
தெரியுதப்பா!! நிஜத்தில் வந்துவிட்டால்
நிம்மதியாய் நாம் இருப்போம் வாராது சென்றதனால்
சோகமப்பா!!!

பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.

# சிவாஜிலிங்கத்தின் உடல்நிலை முன்னேற்றம்

திடீர் உடல்நலப்பாதிப்பு காரணமாக சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த எம்.கே. சிவாஜிலிங்கத்துக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்ட நிலையில், அவருடைய உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான எம். கே. சிவாஜிலங்கம் சென்னையில் தங்கியிருந்த நிலையில் கடந்த 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அவருக்கு திடீர் உடல்நலக்குறைவு ஏற்பட்டிருந்தது.

இதையடுத்து உடனடியாக சென்னை வடபழனியில் உள்ள விஜயா தனியார் மருத்துவமனையின் அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டிருந்தார்.

காலில் உள்ள காயத்தின் மூலமாக ஏற்பட்ட கிருமித்தொற்று உடலில் பரவியதை அடுத்தே அவருக் கு திடீர் உடலநலப்பாதிப்பு ஏற்பட்டிருந்தமை கண்டறியப்பட்டதை அடுத்து அந்தக் காயத்துக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையில் அவருடைய உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு உடல் உபாதைகள் காரணமாக பாதிப்புக்குள்ளாகியிருக்கும் எம்.கே. சிவாஜிலிங்கம் மருத்துவ சிகிச்சைக்காக சென்னையில் தங்கியிருந்த நிலையில், திலீபனின் நினைவேந்தல் வழக்கு விசாரணைக்காக கடந்த 27ஆம் திகதி இலங்கைக்குத் திரும்பியிருந்தார். தேவையற்ற விதமாகப் பயணத்தை மேற்கொள்ள வேண்டாம் என்று மருத்துவர்கள் அறிவுறுத்தியபோதிலும், வழக்கு விசாரணைக்காக இந்தப் பயணத்தை அவர் மேற்கொண்டார்.

இதையடுத்து கடந்த 28ஆம் திகதி வழக்கு விசாரணையை முடித்துக்கொண்டு அவர் மீண்டும் சென்னைக்குத் திரும்பினார். இந்த இடைப்பட்ட பயணத்தின் போது அவர் மாத்திரைகளை எடுத்துக்கொள்ளாமையே நோய்த் தொற்று உடலில் பரவக் காரணம் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். (அ-ம-100)




இந்து தர்மாசிரியர் ச.வாகீசன் தொகுத்த, தரம் 6, 7 மாணவர்களுக்கான சைவ நெறி அலகு ரீதியான பல்தேர்வு வினாக்களின் நூல் வெளியீட்டு நிகழ்வு இணுவில் சிவகாமி அறநெறிப் பாடசாலை நிர்வாகத்தின் ஏற்பாட்டில் இணுவில் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் இணுவில் கிழக்கு கிராம சேவையாளர் ஆ.ரஜீவன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (ப-66)

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் . 19 . 10 . 1934



முருகன் அடியில் . 05 . 03 . 2024

**தில்லையம்பலம் கந்தையா கதிரேசு (கதிரேசு மாஸ்ரர்)**

(தில்லையம்பலம் கந்தையா ஸ்ரோர்ஸ் - TKT உரிமையாளர்)
முன்னாள் உப அதிபர் யா/ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை,
முன்னாள் முகாமையாளர் ஆனைக்கோட்டை மூத்த நயினார் கோயில்)

சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், கொண்ட தில்லையம்பலம் கந்தையா கதிரேசு அவர்கள் நேற்று (05.03.2024) செவ்வாய்க்கிழமை முருகனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-அம்மணி தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், நாகம்மா, தம்பிப்பிள்ளை ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான அன்னலக்சுமி, சுப்பிரமணியம், நல்லம்மா ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற கணேசலிங்கம் மற்றும் கணேஸ்வரி, கமலாம்பிகை காலஞ்சென்ற தில்லையம்பலம் மற்றும் கனகாம்பிகை ஆகியோரின் சிறிய தந்தையும், மகேஸ்வரி, காலஞ்சென்ற இரவீந்திரநாதன் மற்றும் குணரத்தினம் காலஞ்சென்ற இன்பராணி மற்றும் பஞ்சலிங்கம் ஆகியோரின் மாமனாரும், கிருஷ்ணவாணி, கணேஸ்வரன், மகேஸ்வரன், தர்மேஸ்வரன், கலைவாணி, தணிஸ்வரன், சுதர்சன், சுரேசன், சுதர்சினி, சிவரூபினி, சிவதாரணி, சிவராகினி, செல்லக்கணேஸ், செந்தூரன் செந்தாயினி, செயந்தினி றஜிதா சாருகா, சானுஜன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2024) புதன்கிழமை அவரது இல்லத்தில் பி.ப 12.30 மணியளவில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக புகழுடல் கல்லுண்டாய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 6

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எழுத்தாளர் ஐயாத்துரை சாந்தன் கலந்துகொள்ளும் வாசிப்பும் கலந்துரையாடலும் நிகழ்ச்சி, யாழ்.பல்கலைக்கழகத்தின் மொழியியல் ஆங்கிலத்துறையினரால் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட கருத்தரங்கு மண்டபத்தில் இன்று புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு இடம்பெறும். (ப)

## வெள்ளோட்டம்

கோண்டாவில் வடக்கு ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்குப் புதிதாக உருவாக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா இன்று புதன்கிழமை பி.ப. 3 மணியளவில் நடைபெறவுள்ளது. (ம-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இன்னமும் மாறாத வன்மம்

மூடக்குவதற்காகப் பின்னப்பட்ட சதிவலையில் தான் நாங்களும் சிக்கவைக்கப்பட்டோம். எஞ்சியிருக்கும் எம் மூவரையும் மீட்டெடுங்கள் என்று சொல்லியிருக்கிறார் திருச்சி சிறப்புமுகாமில் அடைக்கப்பட்டிருக்கும் முருகன். ராஜீவ் கொலைவழக்கில் தண்டனை பெற்றவர்களில் அவரும் ஒருவர். சாந்தனைப் போலவே அவரும் இன்னமும் சொந்தநாட்டுக்கோ அல்லது அவர் விரும்பிய வேறுநாட்டுக்கோ செல்லமுடியாமல் சிறப்புமுகாம் என்ற தனிச்சிறைக்குள் வாடிவருகிறார். சாந்தனுக்கு நேர்ந்த கதி தனக்கு வருமுன்னர் உண்மைகளை உலகுக்குச் சொல்லிவிடவேண்டும் என்ற தவிப்போடு அவர் மொழிந்த வார்த்தைகள் சாந்தனின் இறுதிப்பயணத்தில், தொலைபேசி வழியே ஒலித்தன. அந்த வார்த்தைகள் இத்தனை நாளும் அவர்கள் பட்ட சிறைவாசத்தின் வலியையும், விடுதலை செய்யப்பட்ட பின்னரும் வெளியுலகோடு தொடர்புகொள்ளமுடியாமல் அடைக்கப்பட்டிருக்கும் அவஸ்தையையும், எங்களையாவது உயிரோடு மீட்டு விடுங்கள் என்ற கெஞ்சலையும் கேட்போரிடத்தே உண்டுபண்ணியிருந்தன.

சாந்தனின் சாவுக்கு இந்தியாவின் மத்திய, தமிழக அரசுகளும், இலங்கை அரசுமே முழுக்காரணம் என்பது வெளிப்படையான விடயம். சாந்தனின் சாவு மூலம் உலக அரங்கில் பறிபோன மானத்தைச் சீராக்கும் சிந்தனை இப்போது கூட இந்திய மத்திய - தமிழக அரசுகளுக்கு வரவில்லை என்பது தான் ஆகப்பெரும் வேதனை. தங்கள் இழுத்தடிப்பாலும், திட்டமிட்ட பழிவாங்கலாலும் ஓர் உயிர் பறிபோய்விட்டதே என்ற குற்றவுணர்ச்சி சிறிதும் இல்லாமல், சிறப்புமுகாமில் எஞ்சியிருக்கும் றொபேர்ட் பயஸ், முருகன், ஜெயக்குமார் ஆகிய மூவரையும் பழையபாணியிலேயே இந்தியாவின் மத்திய - மாநில அரசுகள் கையாள்கின்றன. இந்திய மத்திய அரசு என்னதான் உலக அரங்கில் தன்னையொரு வல்லரசாக நிலைநிறுத்த முயன்றாலும், இலங்கைக்கு முன்னால் பெட்டிப்பாம்பாக அடங்கிவிடும் விநோதம் இன்னமும் தொடரவே செய்கின்றது. அத்தோடு என்னதான் ராஜீவ்காந்தி, தனது பரமவைரியான காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவரென்றாலும் கூட, தங்கள் நாட்டின் பிரதமராக இருந்தவரை எப்படி ஒரு போராளிக்குழு கொன்றுவிட்டு, உயிரோடு வெளியேற முடியும் என்ற வன்மம் பா.ஜ.க. அரசாங்கத்திடம் இருக்கவேசெய்யும். எனவே இந்திய மத்திய அரசாங்கம், சாந்தனைச் சாகடிக்கவே முயற்சிக்கும் என்பதும் தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும். ஆனால் தமிழக அரசும் இந்த நயவஞ்சகச் சதியில் கூட்டாளி யாகக் கைகோர்க்கும் என்பதைத்தான் தமிழ்மக்களால் தாங்கிக்கொள்ள முடியாமலிருக்கிறது.

இதற்கு முன்னரும் - கருணாநிதி உயிரோடு இருந்த காலத்தில் - தி.மு.க.வின் ஆட்சியில் ஈழத்தமிழர்களுக்கு எதிராக எத்தனையோ துரோகங்கள் தமிழகத்தில் இழைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் கருணாநிதி என்ற ஒற்றைமனிதரின் தனிப்பட்ட குரோதத்தின், அரசியலின் வெளிப்பாடாகவே ஈழத்தமிழர்கள் எண்ணினர். ஆனால் அப்பன் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறடி பாய்வதைப் போல, தந்தைசெய்த துரோகத்தை விட, இப்போதைய தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் தன் தமிழ்த் தேசிய எதிர்ப்பை, சிறைப்பறவைகள் மீது காட்டுகின்றார். மத்திய அரசாங்கம் அனுமதி வழங்கிய பெப்ரவரி 22 ஆம் திகதியே சாந்தனை விடுவித்திருந்தால், தாயைக் கண்ட மகிழ்வி லேயே சாந்தனின் நோயெல்லாம் பறந்திருக்கவும் கூடும். ஆனால் இந்திய மத்திய அரசெனும் சாமி வரங்கொடுத்தும் தமிழக அரசெனும் பூசாரிகள் செய்த காரியத்தால் சாந்தனின் உயிர் பறிபோய்விட்டது.

'இதெல்லாம் சட்டம் சார்ந்த விடயங்கள். உடனடியாக எதனையும் செய்யமுடியாது' என்று சிலவேளை தமிழக அரசுக்கு யாரும் வக்காலத்து வாங்கக்கூடும். அத்துமீறி மீன்பிடித்து, இலங்கைச் சட்டத்தின்படி சிறைக்குள் தள்ளப்பட்ட மீனவர்களை விடுவிக்க, அந்தச்சட்டத்தை வலுவிழக்கச் செய்யுமளவுக்கு இராஜதந்திர அழுத்தங்களை வழங்கக்கூடிய இந்தியாவால் - தமிழக அரசால், தங்கள் நாட்டில் இருக்கும் ஒரு ஜீவனை சட்டப்படி விரைவாக விடுவிப்பதென்பது அவ்வளவு கடினமான காரியமல்லவே. குற்ற உணர்ச்சியாலோ அல்லது இன்னமும் வன்மம் மனதுக்குள் குடிகொண்டிருப்பதாலோ என்னவோ சாந்தன் சாவடைந்த பின்னர் ஒருவரியில்கூட தமிழக அரசின் சார்பிலோ, தி.மு.க. சார்பிலோ அஞ்சலிச் செய்திகூட விடவில்லை. சாந்தனைக் கொன்றது இந்திய மத்திய - தமிழக அரசுகளே என்பதற்கு இதைவிட வேறென்ன சான்று தேவை?




# இலங்கைப் பொறிமுறை தீர்வைப் பெற்றுத்தராது!

## பேர்ள் அமைப்பு சுட்டிக்காட்டு

**கொழும்பு, மார்ச் 6**
**சர்வதேசச் சட்டங்களை மீறுபவர்கள் தண்டனையிலிருந்து விலக்களிக்கப்படமாட்டார்கள் என்ற செய்தியைத் தமிழர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு இலங்கையைப் பொறுப்புக்கூறச் செய்வதன் ஊடாகச் சர்வதேச சமூகம் தெரிவிக்கமுடியும் என்று இலங்கையில் சமத்துவம் நிவாரணத்துக்கான மக்கள் அமைப்பு (பேர்ள்) ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் தெரிவித்துள்ளது.**

ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையில் மனித உரிமை ஆணையாளரின் வாய்மூல அறிக்கையின் பின்னர் இடம்பெற்ற பொதுவிவாதத்திலேயே அந்த அமைப்பு இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளது.

"அர்த்தபூர்வமான பொறுப்புக்கூறல் நீதி ஆகியவற்றை முன்னெடுப்பதில் இலங்கையின் ஆட்சியாளர்கள் எந்த அரசியல் உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்தவில்லை. தற்போதைய அரசாங்கம் வெற்று நல்லிணக்க பொறிமுறைகளையே முன்வைக்கின்றது.

இந்தப் பொறிமுறை கடந்தகால உள்நாட்டுபொறிமுறைகளைப் போன்று பாதிக்கப்பட்டவர்களின் கரிசனைகளைத் தீர்க்கப் போவதில்லை. மோதல்களின் அடிப்படைகளுக்குத் தீர்வை காணப் போவதில்லை. சிங்கள - பௌத்த பேரினவாதமே தொடர்ந்தும் இலங்கையில் முக்கியமான இயங்குசக்தியாகக் காணப்படுகின்றது. மனித உரிமைகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் சட்டங்கள் தொடர்ந்தும் உருவாக்கப்படுகின்றன" என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (எ-இ)

# 134 பொலிஸார் போதைக்கு அடிமை

போதைப்பொருள் பயன்பாட்டுக்கு அடிமையாகியுள்ள சுமார் 134 பொலிஸ் உத்தியோகத்தர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் - என்று பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

"அவர்களுக்கு மருத்துவ ஆலோசனை வழங்கப்பட உள்ளது. மருத்துவ ஆலோசனை பெற்றுக் கொள்ளத் தவறும் நபர்கள் சேவையிலிருந்து விலகப்படுவர்" என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

# பாதாளக் குழுக்களுக்கு பொலிஸும் 'சப்போர்ட்'

## தேசபந்து சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு, மார்ச் 6
பயிற்சி பெற்ற பொலிஸாரும் பாதுகாப்புப் படையினரும் பாதாள உலகக் குழுக்களால் வாடகைக்கு அமர்த்தப்பட்டு சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர் என்று பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

பதவி ஏற்பதற்கு முன்னதாக அஸ்கிரிய, மல்வத்தை பீடங்களின் பீடாதிபதிகளை சந்தித்து ஆசி பெற்றுக்கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (ச-6)

# நெருக்கடியால் மூடப்படும் பாற்பண்ணைகள்

நுவரெலியா மாவட்டத்தில் கடந்த ஆண்டு 2 ஆயிரத்து 500 சிறிய பாற்பண்ணைகள் மூடப்பட்டுள்ளன என்று மத்திய மாகாண கால்நடை உற்பத்தி பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

மாடுகளுக்கு புல் கிடைக்காமை, மேய்ச்சல் தரவை நிலங்கள் இன்மை, கால்நடை உணவுகள் தட்டுப்பாடு, கால்நடை மருத்துவர்களுக்கான தட்டுப்பாடு போன்ற நெருக்கடிகளால் அவை மூடப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-6)

# ஜனவரி, பெப்ரவரியில் 850 பேருக்கு டெங்கு!

யாழ்.மாநகர பிரதேசத்தில் இந்த ஆண்டில் கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் 850 பேர்வரையில் டெங்கால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

ஜனவரி மாதத்தில் 670 பேரும், பெப்ரவரியில் 180 பேரும் இவ்வாறு டெங்கால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த மாதத்தின் கடந்த மூன்று நாள்களில் பத்துப் பேர் வரையில் டெங்கால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை தற்போதைய வறட்சியான காலநிலையால் டெங்கின் தாக்கம் குறைவடைகின்றது என்றும் சுகாதாரப் பிரிவு தெரிவித்தது. (ச-17)

## நாளை

07.03.2024
**வியாழக்கிழமை**
**மாசி–24**
சுபநேரம் : 07.54 - 09.24
ராகுகாலம் : 01.54 - 03.24

## நாளொரு நல்வார்த்தை

**உன் வேதனை பலரைச் சிரிக்க வைக்கலாம். ஆனால், உன் சிரிப்பு ஒருவரைக் கூட வேதனைப்படுத்தக் கூடாது.**

—சார்லி சப்ளின்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டி - பொலநறுவை இடையே இரண்டாம் கட்ட சைக்கிளோட்டம்



கொழும்பு, மார்ச் 6
இலங்கை விமானப் படையின் 73ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, பல கட்டங்களாக முன்னெடுக்கப்பட்டுவரும் சைக்கிளோட்டப் போட்டியின் இரண்டாம் கட்டம் கண்டி - பொலநறுவை இடையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.
காலிமுகத்திடலில் இருந்து யாழ்ப்பாணம் வரையில் மொத்தம் 652 கிலோமீற்றர் தூரம் கொண்டதாக இம்முறை சைக்கிளோட்டப்போட்டி முன்னெடுக்கப் படுகின்றது.
இலங்கை விமானப்படையின் ஆண்டு நிறைவை முன்னிட்டு சைக்கிளோட்டப் போட்டி நடத்தப்படுவது வழமையாக இருக்கின்ற போதிலும், இம்முறை நடத்தப்படும் சைக்கிளோட்டப்போட்டியே மிகப்பெரிய போட்டியாக அமைந்துள்ளது. எதிர்வரும் 7ஆம் திகதி யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் சைக்கிளோட்டப் போட்டிகள் நிறைவுக்கு வரும்.
போட்டியின் இரண்டாம் கட்டம் கண்டி - பொலநறுவை இடையில் 137.2 கிலோமீற்றர் தூரம் உடையதாக நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. 200க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் இதில் பங்குபற்றினார்கள். இலங்கை சைக்கிளோட்ட சம்மேளனத்துடன் இணைந்து இலங்கை விமானப் படையால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் விமானப்படை சைக்கிளோட்டப் போட்டிக்காக 'நிப்பொன் பெயின்ட்' நிறுவனம் பிரதான அனுசரணை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)




# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எடுத்த காரியத்தில் ஏதாவது இடையூறால் அவதிப்படுவீர்கள். புதிய முயற்சிகளைத் தள்ளிப் போட்டால் நஷ்டம் அடையமாட்டீர்கள். ஒப்பந்தங்கள் செய்யும்போது இரண்டு மடங்கு எச்சரிக்கை தேவை. வாகனப் பயணங்களில் கவனம் தேவை.

**இடபம்:** வியாபாரத்தில் இலாபம் உண்டாகும். தொழிலில் உருவாகும் போட்டிகளைச் சுலபமாக முறியடிப்பீர்கள். மேலதிகாரிகளின் பாராட்டல் பரவசமடைவீர்கள். அனுகூலம் உண்டாகும். உடல் நலனில் கவனம் செலுத்தவும்.

**மிதுனம்:** ஆடல் பாடல் என்று இன்பமாகப் பொழுதைக் கழிப்பீர்கள். தொழிலில் சிறு தடங்கல் ஏற்படலாம். புத்திசாலித்தனமாக அடுத்த கட்டத்துக்கு நகர்வீர்கள். உற்சாகம் ஏற்படும். பணவரவு தாராளமாக இருக்கும்.

**கடகம்:** ஒரு கவலை நெஞ்சில் உறுத்தும். மனைவி மக்களின் ஆதரவால் மனநிம்மதி பெறுவீர்கள். தேவைக்காக அதிக விலை கொடுத்து பொருள்கள் வாங்குவீர்கள். கடுமையான உழைப்பால் நல்ல பெயர் எடுப்பீர்கள். பணிச்சுமை நீங்கும்.

**சிம்மம்:** முயற்சி செய்யாமலேயே முன்னேற்றப் பாதைகளின் கதவுகளைத் திறப்பீர்கள். மகிழ்ச்சி அடைவீர்கள். சிக்கலில் இருந்த காரியம் சுலபமாகத் தீரும். புதிய வாகனம் வாங்குவீர்கள். நற்செய்தி வந்து சேரும்.

**கன்னி:** சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் கொடுப்பீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**துலாம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உறவினர்களால்சில பிரச்சினைகள் ஏற்பட்டுநீங்கும். பிடிவாதப்போக்கு மனஅமைதியை கெடுக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். விற்பனை சற்றுக் குறைவாகத்தான் இருக்கும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். முக்கியமான முடிவு எடுக்க உகந்த நாள்.

**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். எதிர்பாராத பொருள் சேர்க்கை உண்டு. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமை அவசியம். இலாபம் கூடுதலாகக் கிடைக்கும்.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடும். பொறுமை அவசியம். குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:** ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடுகள் நீங்கும். செலவுகள் அதிகரிப்பதால் கையிருப்புக் குறையும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாக முடியும். பணவரவுடன் திடீர்ச் செலவுகளும் ஏற்படக்கூடும்.

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச் 6
நாரந்தனை - சரவணை கர்ணந்தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் மகா சிவராத்திரியை முன்னிட்டு சிறப்பு சொற்பொழிவு சிவநெறிப் பிரகாசகர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் தலைமையில் ஆலயப் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
இதன்போது 'சிவராத்திரி உணர்த்தும் வாழ்வியல்' என்னும் விடயபொருளில் சைவப் புலவர் செ. த. குமரன் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார்.

✪ ✪ ✪ ✪

யாழ்ப்பாணம், மார்ச் 6
சிறுப்பிட்டி மேற்கு, அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தில் மகா சிவராத்திரியை முன்னிட்டு 'சிவ சிவ என்றிடச் சிவகதி தானே' என்னும் விடயப்பொருளில் சிறப்புச்சொற்பொழிவு நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.
சிவநெறிப் பிரகாசகர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் இளஞ்சைவப் புலவர் க. கயிலைவாசன் சொற்பொழிவை நிகழ்த்தவுள்ளார். சொற்பொழிவில் இருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

✪ ✪ ✪ ✪

ஊர்காவற்றுறை, மார்ச் 6
நாரந்தனை வடக்கு, பண்டாரப்புலம் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் கோவிலில் மகா சிவராத்திரியை முன்னிட்டு 'சிவ சிவ என்றிடச் சிவகதி தானே ' என்னும் விடயப்பொருளில் சிறப்புச் சொற்பொழிவு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை இரவு 11.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.
ஆலயப் பிரதான மண்டபத்தில் சிவநெறிப் பிரகாசகர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் செ.த. குமரன் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார். சொற்பொழிவில் இருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# நாடகப் பயிலகம் புதிய பிரிவு ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 6
நாடகக் கலையின் மேம்பாடு கருதி செயல்முறை சார்ந்த தேர்ச்சியை மேம்படுத்தும் நோக்கோடு திருமறைக் கலாமன்றத்தின் நாடகப் பயிலகத்தால் நடத்தப்படும் நாடக அரங்கியலுக்கான சான்றிதழ் கற்கைநெறியின் 2024 ஆம் ஆண்டுக்கான புதிய பிரிவு எதிர்வரும் 9ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இல. 238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலைத்தூது மணிமண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.
நாடகக் கலையில் ஆர்வம் உள்ளவர்களும், நாடகமும் அரங்கியலும் பாடத்தின் தரம் 11, 12, 13களில் பயிலும் ஆர்வமுள்ள மாணவர்களும் இணைந்துகொள்ளமுடியும் என்றும், ஆறு மாதங்களைக் கொண்ட இந்தப் பயிற்சிநெறிக்கான வகுப்புகள் சனி, ஞாயிறு தினங்களில் பி.ப. 3.30 மணி தொடக்கம் 5.30 மணிவரை நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பயிற்சியில் இணைய விரும்புவோர் ஆரம்ப நிகழ்வுக்கு வந்து இணைந்துகொள்ளமுடியும்.
பயிற்சிநெறியில் நாடக எழுத்துருவாக்கம், நடிப்பு, நெறியாள்கை, அரங்கத் துணைக்கலைகள் (வேடஉடை, ஒப்பனை, காட்சி விதானிப்பு, இசை, ஒளி விதானிப்பு), நாடகத் தயாரிப்பு, கூத்துப் பயிற்சிகள் போன்றவை பிரதான அம்சங்களாக அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# கற்றல் உபகரணம் கையளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 6
பொருண்மியம் நலிவுற்ற மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் சங்கானை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் நிதியனுசரணையில் கடந்த சனிக்கிழமை வழங்கப்பட்டன. சங்கத்தின் முன்னாள் உறுப்பினரான சி. முகுந்தனின் நிதியனுசரணையில் இவை வழங்கப்பட்டன.
சங்கத் தலைவர் கேசவதாசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், சங்கத்தின் பொது முகாமையாளர் திருமதி கோ. கிருஷ்ணவேணி, சங்கத்தின் உப தலைவர் செ. குமாரசிங்கம், சங்கானை பிரதேச செயலர் திருமதி உ. கவிதா, சங்கத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களான சி. பரமானந்தராசா, கா. பார்த்தீபன், முன்னாள் பணியாளரும் நிதி வழங்குநருமான சி. முகுந்தன், சங்கத்தின் பணியாளர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-27)

# மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 6
மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி சியாமளா மில் வீதியில் அமைந்துள்ள கல்லூரி மைதானத்தில் அதிபர் திருமதி லலிதாமலர் முகுந்தன் தலைமையில் நாளை வியாழக்கிழமை பி.ப 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ப-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதன் பொய்கை

06.03.2024
புதன்கிழமை

**"அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை"**

**பொருள்:** அறியாதவர், அறத்திற்கு மட்டுமே அன்பு துணையாகும் என்று கூறுவர். ஆராய்ந்து பார்த்தா வீரத்திற்க வே துணையாக நிற்கில







# வாழவைத்த பனை பாழ்பட்டது ஏன்?



■ முகுந்தன்

காகிதங்கள் தோன்றாத காலத்தில் எழுத்தறிவைச் சுமந்த ஏடுகளே அறிவின் சின்னம். ஏடு என்ற சொல்லின் வேர் பனை ஓலை அல்லவா? அறிவுப்பசியை பன்னெடுங்காலமாக போக்கிய பனை மரங்களே ஏடுகளின் தாய். கடந்த தலைமுறையில் திருக்குடந்தை அருணாசலப் புலவர் எழுதிய 'தால விருட்சம்' பனையின் 801 பயன்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளதாகத் தகவல் உண்டு. 'தால விருட்சம்' என்றால் 'பனையின் முகவரி' என்று பொருள்.

இன்று தங்கத்தில் தாலி செய்கிறார்கள். மஞ்சள் நாணில் திருமாங்கல்யத்தைக் கோர்த்து கழுத்தில் அணிவது தாலி. பனங்காட்டுப் பண்பாட்டில் பழந்தமிழர்கள் பனை ஓலையில் மணமகள் பெயரை எழுதி, சுருட்டி, துவாரமிட்டு மணமகன் காதில் அணிவார்களாம். அதுதான் தாலி. காதணி விழாவும் கல்யாணமும் ஒன்றாக நிகழ்ந்தன. 'தால' என்றால் 'இலை' என்று பொருள். பனை ஓலையும் இலைதானே. ஆகவே பனை மரம் தால மரமாயிற்று. தாலி வழங்கிய மங்கல மரமும் அதுதான். பழந்தமிழ் மன்னர்களின் குலச்சின்னமும் பனைதான்.

### கள்ளும் கதைசொல்லும்

பழந்தமிழர் வாழ்வில் பனை மரமே பணம் தரும் மரம். அன்று கரும்புச் சர்க்கரை தோன்றவில்லை. இனிப்புக்கு இலுப்பைப் பூவும், பனங் கருப்பட்டியுமே பயனாயிற்று. போதைக்கு அன்று சாராயம், கசிப்பு இல்லை. பனம் கள் மட்டுமே பயனாயிற்று. படைவீரர்களுக்கு மன்னர்கள் பனம் கள் வழங்கியதைப் புறநானூறு தெரிவிக்கிறது. கலங்கல் என்பது பனங்கள்.

பனை 'கள்ளின் வாழ்த்தி கள்ளின் வாழ்த்தி காட்டொடு மிடைத்த சியாமுற்றில்' (புறநானூறு- 316) மன்னன் வழங்கிய கலங்கலைக் குடித்துவிட்டு படைவீரர்கள் கள்ளை வாழ்த்தினர். பனங்கள் மிகவும் அரிய சித்த ஆயுர்வேத மருந்து என்பதை அறியாத பாமரர்கள் நாங்கள். என்ன சாப்பிட்டாலும் எடை ஏறாமல் பலம் குன்றியவர்கள் கள்ளைக் குடித்து நல்லுணவு உண்டால் பலசாலியாவார்கள். வயதுக்கு ஏற்ற எடை ஏறும். சுவாச கோசம், நீரிழிவு நோய்களுக்கு மருந்து. போதைக்கான வேதியல் கலக்காவிட்டால் சுத்தமான கள் என்பது ஒரு மருந்து. சுத்தமான கள்ளில் போதை குறைவு. மதுபானக் கடைகளில் விற்கப்படும் பிராந்தி, விஸ்கி, ரம், ஜின் எல்லாம் சுத்தமானவை அல்ல. மொலாசஸ்ஸிலிருந்து பிரித்தெடுக்கப்படும் அல்கஹோலின் அடர்த்தியைக் குறைத்து விஸ்கி, பிராந்தி, ரம் ஆகியவற்றின் நிறம் கெராமல் என்ற சாயத்தினால் பெறப்படுகிறதாம்.

பிராந்தியை திராட்சை ரசத்திலிருந்தும் மால்ட்டிலிருந்து விஸ்கி, ஜின்னும் பெறப்பட வேண்டும். இப்போது மக்காச் சோள மால்ட் பயனாகிறது. ரம் மட்டும் கரும்புச் சாறிலிருந்து பெறவே . மேலை நாடுகளில் சுத்தமான சரக்கு பெற ண்டு. ஆனால் உள்ளூரில் விற்கப்படும் பலவற் கலப்புதான்.

இலுப்பைப் பூக்களிலிருந்து பழங் டி மக்கள் தயாரிக்கும் சாராயம் கூட தீமையளிக் து. மதுபானங்கள் எல்லாம் நின்று கொல்லும் வி ம. அவற்றை விடப் பனங்கள் நூறு மடங்கு உயர்ந்த பானம். சங்க காலத் தமிழர்கள் பனங்கள் பருகி திடமுடன் வாழ்ந்ததால் மனிதகுல வாழ்வுக்கு பனை மரங்களை வளர்க்க வேண்டும் என்று புறநானூறில் 323ஆவது பாடல் கூறுகிறது. சங்க காலத் தமிழ மன்னர்கள் பனை மரங்களை வளர்த்தனர். பனை மர வளர்ப்புக்கு இன்றைய அரசு திட்டமிடவில்லை. சர்வதேச நிறுவனங்களை அழைத்து தொழில் முதலீடு செய்யும்படி வற்புறுத்தும் அரசுகள் பனை மரம் வளர்த்தல் போன்ற பல்வேறு குடிசைத் தொழில் வழங்கும் வேலை வாய்ப்புகள் பற்றி கவனம் செலுத்தாதது ஏன்?

### சர்வதேச மவுசு

பனை நுங்கு அமெரிக்க, ஐரோப்பிய சந்தைகளைக் கவரக்கூடியது. தாய்லாந்தில் இருந்து சென்ற பனம் பழச்சாறு, நுங்கு, நுங்கு ஜாம் ஆகியவை ஐரோப்பிய சந்தையைப் பிடித்துள்ளதாம்.

அப்படிப்பட்ட ஐரோப்பிய சந்தையை நாம் பிடித்து விட்டால் பனை மரம் பண மரமாகுமே! உள்நாட்டிலும் பனை சார்ந்த தொழில்களை வளர்க்கலாமே. பனை வளர்த்துக் கோடையில் மக்களுக்கு நுங்குகளை வழங்கினால், உள்ளம் குளிர்ந்து பனை வளர்த்த தலைவர்களுக்கு தேர்தலில் வாக்களிப்பார்களே! பனை தரும் பொருள்களில் ஏழைக்கேற்ற சத்துணவும் உண்டு. அதுவே பனங்கிழங்கு. கிராமங்களில் பெண்கள் பனம் விதைகளை சேகரித்து மண்ணில் நெருக்கமாக நடவு செய்வார்கள். பனம் விதை நட்ட 100 ஆவது நாளிலிருந்து அறுவடை செய்யலாம்.

ஒரு பனம் பழத்தில் ஒன்று முதல் மூன்று விதைகள் இருக்கும். ஒரு பழத்திலிருந்து ஒன்று முதல் மூன்று கிழங்குகள் கிட்டும். பனங் கிழங்குகளை சுட்டுத் தின்னலாம். வேக வைத்தும் உண்ணலாம். பனங்கிழங்கில் புரதச்சத்துடன் நிறைய கல்சியமும், பொஸ்பரசும் உண்டு. இயற்கையான சத்துணவு. 75 சதவீதம் மாவுச் சத்தும் உள்ளதால் நல்ல சக்தியை அளிக்கும்.

தால விலாசம் எழுதிய அருணாசலப்புலவர் பனையை ஓர் அற்புத மூலிகை என்றும் கற்பக விருட்சம் என்றும் வர்ணித்துள்ளார். பனை ஓலை, பனம் பூ, பூத்தண்டு, பதநீர், கள், கருப்பட்டி, பனங்கற்கண்டு, நுங்கு, பழம், பனங்கிழங்கு, பனை வேர் எல்லாமே நாட்டு மருந்துச் சரக்குகள். ஒவ்வொன்றுக்கும் தனித்தனியான குணம் உண்டு.

சங்க காலத் தமிழர்களுக்கு காசநோய் வந்தால் பனங்கள் கொடுத்து குணப்படுத்துவார்களாம். அன்று பனங்கள்ளே 'ஸ்ட்ரப்டோமைசின்'.

### வைரம் பாய்ந்த பனை

அந்தக் காலத்தில் கொங்கிரீட் வீடுகள் ஏது? வளைவு ஓடுகள் கொண்ட ஓட்டு வீடுகளுக்கு வைரம் பாய்ந்த பனம் பலகைகள், உத்திரம், தூண்களாக பயனாயிற்று. பனைமரம் கனம் நிரம்பிய உறுதியான மரம். பனை மரங்களை நெருக்கமாக நட்டு உயிர்வேலி எழுப்பிவிட்டால் யானை கூட உள்ளே நுழையாது. காட்டுப் பகுதிகளில் விவசாயம் செய்வோர் பனைமர உயிர்வேலி அமைப்பது நன்று.

பனை மரங்களுக்கு இவ்வளவு பயன்பாடு இருந்தும் நாம் பெற்ற நாகரிகம் பனை மரங்களுக்கு உதவுவதாயில்லை.

இது கொங்கிறீட் யுகம். பனை ஓலை வேயப்பட்ட குடிசைகள், ஓட்டு வீடுகள் எல்லாம் காணாமல் போய் விட்டன. ஏழை மக்களுக்கு ஏராளமான வேலை வழங்கக்கூடிய பனைமரம், அன்று தமிழர்களின் குலச் சின்னமாயிருந்தும்கூட, இன்று பாழ்பட்டது ஏன்? ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம்மாறிய பழமொழிகள்



சி.நற்குணலிங்கம்

பழமொழிகள் நம் முன்னோர்கள் நமக்கு அளித்த அருஞ்சொல் வளங்கள். தமிழ்மொழியில் பல்லாயிரம் பழமொழிகள் உள்ளன. அவை எமக்கு நல்வழி காட்டுவன. வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுவன. அவற்றைப் போற்றிப் படிப்பதும், பேணிப்பாதுகாப்பதும் எல்லோரதும் கடமையாகும். எமது பண்டைய செய்யுள் நூல்களிலும், உரைநடை நூல்களிலும் அதிகமான பழமொழிகள் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. கூறும் கருத்துக்கு ஆதாரமாகவும், உதாரணமாகவும், காட்டப்படுவதுமான கருத்தொடர் பழமொழியாகும். பழமொழிகள் காலத்தின் கண்ணாடிகள்.

### பழமொழிகளின் இன்றைய போக்கு

பல ஆண்டுகளாக நமது சமுதாயத்தில் உருவான அனுபவங்கள், கருத்துகள், எண்ணங்கள், வாழ்க்கை முறைகள், நம்பிக்கைகள், ஆழமான பற்றுகள், உளவியல் நிலைகள், பொருளாதார நிலைகள் முதலியனவற்றை எதிரொலிப்பனவாக பழமொழிகள் விளங்குகின்றன. இவை நாலு வார்த்தைகளில் உண்மைகளை, நீதிகளைக் கூறுகின்றன. ஆழமாக ஊன்றிச் சிந்தித்தால்தான் அதன் பயன் புரியும். மேலெழுந்தவாரியாகப் பார்ப்போமானால் ஏதோ ஓர் அர்த்தம் தோன்றும். அது பழமொழியின் கருத்தாகி விடமுடியாது. அதன் பெருமையை நாம் நன்கு விளங்கிக் கொள்ளவேண்டும். அத்தகைய பெருமைமிக்க பழமொழிகளை தடம்மாறிச் செல்ல அனுமதிக்கக்கூடாது.

பழமொழிகள் ஒரு காலகட்டத்திலிருந்து இன்னொரு காலகட்டத்துக்கு பரிமாறப்படும்போது பாதை மாறிப் பயணம் செய்யவும் தவறவில்லை என்பது புரிந்துள்ளது. இன்று பலர் பலபழமொழிகளை தவறாகத்தான் பயன்படுத்துகின்றனர். அது உற்று நோக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

தடம் மாறிய பழமொழிகள் பல. 'கல்லைக் கண்டால் நாயைக் காணோம். நாயைக் கண்டால் கல்லைக் காணோம்'... இது தடம் மாறிய பழமொழி. உண்மையான பழமொழி 'கல்லைக் கண்டால் நாயகனைக் காணோம். நாயகனைக் கண்டால் கல்லைக் காணோம்' என்பதே. கல்லால் செதுக்கப்பட்ட கடவுள் சிலையை கல்லாகப் பார்த்தால் அங்கே கடவுளைக் காணமுடியாது. கடவுளாகப் பார்த்தால் கல்லைக் காணமுடியாது.

'ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணத்தைப் பண்ணு' இது தடம் மாறிய பழமொழி. உண்மையான பழமொழி 'ஆயிரம் பேரிடம் போய்ச் சொல்லி ஒரு கல்யாணத்தைப் பண்ணு' என்பதாகும். அதாவது, உற்றார், உறவினர், நண்பர்களுக்கு ஆயிரம் தடவை போய்ச் சொல்லி கலியாணம் செய்.

'படிச்சவன் பாட்டைக் கெடுத்தான். எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான்' இது தடம் மாறிய பழமொழி. உண்மையான பழமொழி 'படிச்சவன் பாட்டைக் கொடுத்தான், எழுதினவன் ஏட்டைக் கொடுத்தான்'

'ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்' இது தடம் மாறிய பழமொழி. உண்மையான பழமொழி 'ஆயிரம் வேரைக் கொன்றவன் (மூலிகை வேரை) அரை வைத்தியன்'.

'நல்ல மாட்டுக்கு ஒரு சூடு'. அதாவது, நல்ல மனிதனாக இருந்தால் ஒரு தடவை சொன்னதுமே புரிந்து நடப்பான். இது தடம் மாறிய பழமொழி. உண்மையான பழமொழி 'நல்ல மாட்டுக்கு ஒரு சுவடு'. அதாவது, மாடு பதிக்கும் தடம் சுவடு. அழுத்தமான சுவட்டைப் பதிக்கும் மாடே அதிக பலம் வாய்ந்தது. சுவட்டைப் பார்த்தாலே மாட்டின் பலம் புரியும். சந்தையில் மாட்டை வாங்கும் போது இது கவனத்தில் எடுக்கப்படும்.

மக்களிடையே நீண்டகாலமாக வழங்கி வரும் பெறுமதியான பழமொழிகளை சிலர் தாம் நினைத்தவாறு அதனை தம் எண்ணத்துக்கு ஏற்றால் போல் மாற்றி அமைக்கிறார்கள். அவ்வாறு மாறும்போது அவை தடம் மாறிய பழமொழிகள் என கொச்சைப்படுத்தப்படுகின்றன. நம் முன்னோர்கள் நம் நல்வாழ்வுக்காக சொல்லிவைத்த பழமொழிகளை நாம் பிறரைக் குறை கூறவோ, அல்லது பிறர் பழமொழிகளைக் குறைகூறவோ இடமளிக்கக் கூடாது. எப்படி இருந்த பழமொழிகள் இப்படி ஆயிடிச்சே.

## வடபகுதியில் மனிதாபிமான கண்ணிவெடியகற்றலில் ஈடுபடும் ஸார்ப்



ஸார்ப் நிறுவனமானது, இலங்கையின் வடபகுதியில் மனிதாபிமான கண்ணிவெடியகற்றலில் ஜப்பான் மற்றும் அமெரிக்கா நாட்டு நிதியுதவியுடன் ஈடுபட்டு வருகின்றது.

2016ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2023ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18ஆம் திகதி வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள தச்சடம்பன் அம்பகாமம் மற்றும் மாங்குளம், புதுக்குடியிருப்பு மேற்கு, புதுக்குடியிருப்பு கிழக்கு பகுதியிலும்கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள முகமாலை இயக்கச்சி மற்றும் ஆனையிறவிலும் 27 இலட்சத்து 23 ஆயிரத்து 226 சதுரமீற்றர் பரப்பளவில் இருந்து முப்பத்தேழாயிரத்து முன்னூற்று எண்பத்தைந்து அபாயகரமான வெடிபொருள்களை அகற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நூற்றாண்டு விழா






சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் நூற்றாண்டு விழா அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் மாணவர்களின் கலைநிகழ்வுகள் மற்றும் உரைகள் என்பன நிகழ்வை சிறப்பித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# செயற்கை நுண்ணறிவு வரமா? சாபமா?

கே.திசானி,
மூன்றாம் வருட மாணவி,
சைவசித்தாந்தத்துறை,
கலைப்பீடம்.யாழ்.பல்கலைக்கழகம்

செயற்கை நுண்ணறிவு என்று அறியப்படும் ஏ.ஐ. தொழில்நுட்பம் தற்காலத்தில் அசுரத்தனமான வளர்ச்சியடைந்து வருகின்றது. மனிதகுலத்துக்கு எதிர்காலத்தில் மிகப்பெரும் இன்னல்களை வழங்கக்கூடியதாகக் கருதப்படும் அந்தத் தொழில்நுட்பதில் பாவனையை வரையறுப்பதில், கட்டுப்படுத்துவதில் பல நாடுகளும் பல்வேறுபட்ட செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்த ஆரம்பித்துள்ளன. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் மிகப்பெரிய உச்சத்தை அடைந்தவர்களான ஸ்டீபன் ஹாக்கிங், எலான் மஸ்க், சுந்தர் பிச்சை போன்றோர் பார்த்து பயந்த செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் எதிர்காலத்தில் எந்தவிதமான தாக்கத்தை விளைவிக்கும் என்பதைப் பார்ப்போம்.

செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் 1950 இல் கண்டுபிடிக்கப்பட்டது. மனிதர்களைவிட பல மடங்கு திறன்மிக்கது. அதுமட்டுமல்லாமல் சுயமாகச் சிந்திக்கும் திறனும் உள்ளது. இது அலன் ருறிங் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. அதன்பின் ஐஸாக் என்பவர் ரோபோக்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான மூன்று சட்டங்களை முன்வைக்கிறார். 1961ஆம் ஆண்டு ரோபோடிக்ஹாம் என்னும் ரோபோவை முதன்முதலில் தொழில்துறைக்கு பயன்படும் வகையில் வடிவமைத்தார். இந்த ரோபோடிக்ஹாம் தான் தற்போது எல்லா இடத்திலும் இருக்கின்றது.

2008ற்குப் பிறகு செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் விஸ்வரூபம் எடுத்தது. இந்தச் செயற்கைத் தொழில்நுட்பத்தில் பலவிதம் உள்ளது. அதில் நாம் கொடுக்கும் கருத்துரை மூலமாக அது வேலை செய்யும். மற்றும் நாம் கொடுக்கும் தரவுகள், கருத்துரை எல்லாவற்றையும் ஒன்றிணைத்து அதுவே சிந்தித்து வேலை செய்யும். இயந்திர மனிதன் மூலமாக வருங்காலத்தில் மனிதர்களுக்கு பிரச்சினை உண்டாகும் என செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைத் தயாரிக்கும் நிறுவனங்கள் குறிப்பிட்டிருக்கின்றன. செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தில் இரண்டு விதம் உள்ளது. ஒன்று இயந்திர நுண்ணறிவு மற்றையது செயற்கை நுண்ணறிவு. இயந்திர நுண்ணறிவு என்பது நாம் என்ன சட்டத் தொகுப்பு கொடுக்கின்றோமோ அதற்கேற்ற மாதிரி வெளியீட்டைக் கொடுக்கும்.

இதில் ஏதாவதொரு பிழை ஏற்பட்டால் அந்தப் பிழையை மீண்டும் மீண்டும் செய்யும். இந்த இயந்திர நுண்ணறிவில் இரண்டு வருடத்திற்கு முன்பு எந்தத் தீர்வினை பதிவேற்றினமோ அதையே தீர்வாக வைத்திருக்கும். ஆனால் செயற்கை நுண்ணறிவு என்பது அவ்வாறல்ல. அது துல்லியமான பதில்களையும், ஆழமான சிந்தனைப் பின்னணியையும் கொண்டது. அதிசக்தி வாய்ந்தது. தன்னைத்தானே புதுப்பிக்கும் சக்தியும் கொண்டது. நமது மனித மூளையில் ஒரு பில்லியன் அளவுக்கு நரம்பியல்கள் உள்ளன. இந்த நரம்பியல்களினுடைய வேலையே நமது உடம்பில் ஏற்படும் மாற்றம், நம்மை யாராவது தொடுதல், நம் மீது ஒரு பொருள்படுதல், போன்றவற்றின் சமிக்ஞைகளை மூளைக்குப் பரிமாற்றம் செய்வதுதான்.

**செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் 1950 இல் கண்டு பிடிக்கப்பட்டது. மனிதர்களைவிட பல மடங்கு திறன்மிக்கது. அதுமட்டுமல்லாமல் சுயமாக சிந்திக்கும் திறனும் உள்ளது.**

நமது மூளைக்கு இந்தச் சமிக்ஞை கிடைத்தவுடன் நமது உடல் செயலாற்றும். இந்த நரம்பியலை முன்மாதிரியாகக் கொண்டுதான் நியூரல் நெட்வேக்கிங் என்பதைக் கண்டுபிடித்தார்கள். தற்போது செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்திக் கண்டறியப்பட்டுள்ள இயந்திரங்கள் அநேகமான மனிதப் பண்புகளை ஒத்ததாகக் காணப்படுகின்றன. அதனால்தான் அவை ஆபத்தானவை என்கின்றனர் விஞ்ஞானிகள். இந்த ஏ.ஐ. தொழிநுட்ப மனித இயந்திரங்களால் தொழில்நுட்ப ரீதியாக பல நன்மைகள் ஏற்பட்டாலும் தீமைகளும் உண்டு. ஏ.ஐ. தொழில்நுட்பத்தின் மூலம் இல்லாததொரு மனிதனை உருவாக்க முடியும். அண்மைக்காலத்தில் ஒடிசாவில் ஏ.ஐ. தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஒரு பெண் செய்தி வாசிப்பாளர் மனித இயந்திரத்தை உருவாக்கியுள்ளார்கள். அதேபோல் ஏ.ஐ. தொழில்நுட்பத்தைப் பெரிதும் நம்புவது சார்பு நிலையை உருவாக்கலாம். அத்துடன் ஒரு நிறுவனம் ஏ.ஐ. தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும்போது பல்லாயிரக்கணக்கானவர்கள் வேலையிழப்பையும் எதிர்கொள்வர். இந்தத் தொழில்நுட்பத்தைச் செயற்படுத்தும் போது உறுதியான்மை மற்றும் நம்பகத்தன்மை ஆகியவை கருத்திற்கொள்ள வேண்டியவை முக்கியமான காரணிகள் ஆகும். இதேவேளை, செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தின்மூலம் பல நன்மைகளும் கிடைக்கவே செய்கின்றன. ஏ.ஐ. தொழில்நுட்பத்தை வைத்து பரந்த அளவிலான தரவைப் பகுப்பாய்வு செய்யலாம். மற்றும் கணிப்புகளைச் செய்யலாம். மேலும் இவை சிறந்த முடிவுகளை எடுப்பதை எளிதாக்குகின்றன. மேம்படுத்தப்பட்ட துல்லியத்தன்மை இதற்குண்டு.

தொழில்நுட்பமானது எப்போதும் மனிதனுக்கு நன்மை பயப்பதற்காகவே உருவாக்கப்படுகின்றது. அது எவ்வாறான வழியில் பயன்படுத்தப்படப்போகின்றது என்பது மனித சிந்தனையின் பாற்பட்டதே.

# வண்ணை வைத்தீஸ்வரர் கோயில் கொடியேற்றம் இன்று

இராசையா சிறீதரன்



உலகெல்லாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம்வல்ல பரம் பொருளாகிய சிவபெருமான் தம்மை நினைத்து நெஞ்சுருக நின்று வழிபடும் அடியார்களுக்கு அருட்கடாசம் வழங்கும் நோக்கில் எழுந்தருளி வீற்றிருக்கும் புனித புண்ணியஸ்தலமே வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயம்.



எம்பெருமானுக்கு சோபகிருதி ஆண்டுக்கான திருவிழா இன்று பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 19 தினங்கள் நடைபெறவுள்ளன.

இதன்போது வைத்தீஸ்வரன் வாலாம்பிகா சமேதராக எழுந்தருளி வீற்றிருந்து அருள்பாலிக்கும் அழகே தனி.

இந்தியாவிலே இருக்கும் ஸ்ரீ வைத்தீஸ்வரர் கோயிலில் எவ்வாறு அழகாகக் காட்சி தருவாரோ, அதேபோல யாழ்ப்பாணம் பெரிய சிவன் கோயிலிலும் அழகாக உலாவந்து திவ்ய கடாசம் வழங்கும் பாங்கு பக்திபூர்வமானது.

யாழ். நகரமே விழாக்கோலம் பூண்டிருக்கும் இந்த நாள்களில் அடியார்கள் அனைவரும் தினமும் ஆசாரத்துடன் அங்கம் துலக்கித்தூய்மையாக ஆலயம் வருகை தந்து எம்பெருமானில் அருளைப் பெற்று பரவசமுறுவர்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பிரசங்கம் செய்த பெருமையுடைய இந்த ஆலயம் யாழ்ப்பாண மாநகர மத்தியிலே அமைந்துள்ளது.

இன்று ஆரம்பமாகின்ற திவ்ய மஹோற்சவம் தேர்,தீர்த்தம் மற்றும் பூங்காவனத்துடன் எதிர்வரும் பங்குனி 12ஆம் நாளான 25 ஆம் திகதி நிறைவுக்கு வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பேராசிரியர் சிவேசன் சிவானந்தமூர்த்தி**
*நிகழ்ச்சித்திட்ட தலைவர்*
*சுற்றுலா மற்றும் விருந்தோம்பல்,*
*முகாமைத்துவம்,*
*யாழ்.பல்கலைக்கழகம், இலங்கை*

*இந்தக் கட்டுரையின் கடந்த வாரத்தின் தொடர்ச்சி இந்தவாரம் பிரசுரமாகின்றது.*



# வணிக வளர்ச்சியில் சங்கப் பெண்கள்

பெண் கவிஞர்கள் அவையில் மன்னனைப் போற்றி கவி தொடுத்து வெகுமதிகளை மட்டும் பெற்றதுடன் தன் பணியினை நிறுத்திக் கொள்ளவில்லை. அவர்கள் போர்ப் பாசறைகளுக்கும் சென்று பாடி போர் வீரர்களை மகிழ்வித்தனர் (பதிற்றுப் பத்து 61: 15 17). பெண் கலைஞர்கள் பொன்னுக்கும் பொருட்களுக்கும் மட்டுமல்லாது தேசத்தின் மீது கொண்ட தேசப்பற்றினாலும்; அவர்கள் பாடல்களினைப் பாடினார்கள்.

மேலும் சங்க காலப் பெண்கள் விவசாயம், மீன்பிடி, வியாபாரம், வைத்தியம், கள்ளினைப் பதனிட்டு விற்பனை செய்தல், புலத்தொழில் (பிறரின் ஆடைகளினை தூய்மை செய்யும் தொழில்) கைவினைத் தொழில், கற்பித்தல், இல்லத்தைத் தூய்மைப்படுத்தும் தொழில் என பல்வேறு தொழில்களினைச் செய்தனர். இத்தகைய தரவுகளின் விவரணங்கள் வாயிலாக நோக்குகையில் பெண்ணை எத்தகைய உயரிய இடத்தில் சங்கத்தமிழர்கள் வைத்தார்கள் என்பது புலப்படுகின்றது.

**வணிக மாந்தர்கள்**

சங்க காலத்தில் பெண்கள் பல்வேறு வகையான தொழில்களினைச் செய்தார்கள் என இக்கட்டுரையில் முதல் பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இதில் வணிகமும் ஒன்றாகும். வணிக மாந்தர்கள் என்றால் வருமானத்தை அதாவது பண ரீதியான அல்லது பண எதிர்பார்ப்பற்ற ஆதாயத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் வாணிப நடவடிக்கையில் ஈடுபடுபர்கள் ஆவர். பண்டைய கால சமூக கட்டுமானத்தில் வணிக மாந்தர்கள் பல்வேறு வகையான வகிபாகங்களினைக் கொண்டிருந்தனர். அம்மூவணர் என்ற புலவர் நெய்தல் நிலத்து மக்களின் வாழ்க்கை முறையினை ஐங்குறு நூற்றில் தலைவி கூற்றில் (48:13) பாவில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளர். நெய்தல் நிலத்துவாழ் ஆடவர்கள் வலைவீசி அள்ளி வந்த வரால் மீன்களினை உழவன் மனைவிக்கு கொடுத்து அதற்கு மாற்றீடாக நெல்லினைப் பெற்றாள். இங்கு ஆடவர்களினால் சேர்க்கப்படுகின்ற வளங்களை பெண்டிர் தமது தேவைக்கு ஏற்ப பரிமாற்றி, மனையினை சிறப்பாக மனைமாட்சி செய்தனர். மேலும் பரதவ குலத்து பெண்கள் தமது தந்தையால் கடலிலிருந்து பிடித்து கொண்டுவந்த ஏராளமான மீன்களை காயப்போட்டு கருவாடு செய்து அதனை விற்பனை செய்தனர். மேலும் உமணர்களினால் விளைவிக்கப்பட்ட உப்பினை உமட்டியர் (உமணர்களின் பெண்கள்) வீதி நெடுங்கலுமாய் நெல்லும் உப்பும் சமவிலை என கூவிக் கூவி விற்றல் என அகநானூற்றுச் செய்யுள் (20: 1 2) குறிப்பிட்டுள்ளது.

நற்றிணை பாடல் ஒன்று பூ விற்பனை செய்யும் மருத நிலத்து உழவன் மகளின் (பூந்தோட்டகாரன் மகள்) பூவினை விற்பனை செய்வதற்கு தன்னுடைய பூவினை கொள்வனவு செய்யப் பொருத்தமான நபர்களினைத் (வாடிக்கையாளர்கள், கொள்வானவளர் மற்றும் நுகர்வோர்) தேடி வீதிகளில் விற்பனை செய்வாள். அவ்வாறு வீதிகளில் விற்பனை செய்யும் போது பூ மாலையின் சிறப்பினை அதாவது பூ மாலை தொடுத்த பூவின் சிறப்பினை பின்வருமாறு கூறி விற்பனை செய்வாள் 'இப் பூமாலையானது குருக்கத்திப் பூவையும், பித்திகைப் பூவையும் அடுத்து அடுத்த வைத்துத் தொடுத்துக்கட்டிய பூமாலை' என வீதியில் பூ விற்கும் பெண் கூவி கூவி விற்பது பெண்குயில் ஒன்று தன் ஆண் குயிலின் துணைதேடி கூவுவது போல் இருக்கும். அதாவது குரலில் ஓர் ஏக்கம், தவிப்பு, ஓர் இனிமை எல்லாம் கலந்து மொத்தத்தில் உணர்பூர்வமாக இருக்கும் எனவும், மேலும் இவ் நற்றினை செய்யுள் (97 : 28) வாயிலாக சங்க காலத்தில் பூப் பறித்து பெண்கள் மாலைவிற்பனை செய்வதனை ஓர் தொழிலாகச் செய்தனர் என்றும், காலையில் வீதி வீதியாக பூக்கூடையினை தலையில் சுமந்தும் விற்பனை செய்தார்கள் என்றும் அறிய முடிகிறது. இன்றும் கூட தலையில் பூக்கூடை சுமந்து விற்பனை செய்யும் முறையை தமிழகத்தில் காணலாம். மேலும் நற்றிணையில், மலையும் மலை சார்ந்த நிலங்களில் வாழ்கின்ற மலைவாழ் பெண்கள் மலையடிவாரத்தில் (மலைசாரலில்) முள்ளம் பன்றியினை வேட்டையாடிக் கொண்டுவந்த கணவனிடம் அதனைப் பெற்று, பகிர்ந்து கொடுக்கும் வேலையினை மேற்கொண்டனர் என்பதனைப் பின்வரும் நற்றிணைப் பாடல் (85: 811)பகர்கிறது.

சங்ககாலத்தில் பெண்கள், போதை தரும் பனை மரத்துக் கள்ளினை பாளையில் அல்லது ஓலையில் செய்யப்பட்ட பிலாவில் கள்ளினை பருகவரும் ஆடவர்களுக்குக் கொடுப்பார். வெள்ளை (அரி) நிறத்தில் இருக்கும் அந்தக் கள்ளினை வாங்கி, வேண்டிய அளவு பருகியதனால் ஆடவர்களின் கண்கள் செங்கண் களாக மாறிவிடும், அவ் ஆடவர்கள் ஆரவாரத்துடன் போருக்குச் செல்வார்கள் என அகநானூறு பாடல் 157 (15) வரை அழகாக கூறியுள்ளது. மேலும் பெரும்பானாற்றுப்படையில் (336 - 340) ஒன்று நகரப் புறத்தில் வாழ்கின்ற மக்கள் கள் அருந்துவதற்காக பச்சைநிற கொடிகளினால் அழகாக அலங்கரிக்கப்பட்ட பரந்த முற்றத்தினை கொண்ட இடத்தில், பெண்கள் கள்ளினை சமைத்து, அதனை அருந்துவதற்கு ஆடவர்களுக்கு வழங்கினார்கள் எனக் குறிப்பிடுகின்றது. வியாபார நிலையங்களுக்கு மேல் பறக்கின்ற கொடியின் நிறத்தினை அடிப்படையாகக் கொண்டு கள் விற்பனையாகின்ற மனைகளுக்கு கள்ளினை நுகர்வோர் செல்வார்கள் எனப் பட்டினப்பாலை குறிப்பிடுகின்றது. மனையாள் (பெண்) கள்ளினை விற்பனை செய்வாள். இதன் வாயிலாக சங்க காலத்து மெல்லிடையாள் கள் போன்ற போதை தரும் குடி வகைகளினை விற்பனை செய்தாள் என்பது வெளிப்படையாகின்றது.

✦✦✦✦

சமகால உலகில் அதிகமானோர் பெண்ணியவாதிகள் எனத் தம்மை அடையாளப்படுத்திக் கொண்டு பெண்ணியம் குறித்துப் பேசுவதனால் சமூகத்தில் தமக்கென ஓர் அடையாளத்தினை ஏற்படுத்திக்கொள்ள முனைவர்கள் மத்தியில் தொன்மைத் தமிழன் சங்க காலத்தில் உணர்வுப் பூர்வமாக பெண்ணை இல்லாள் எனவும் சக்தி எனவும் போற்றி வாழ்ந்தார்கள். பெண்ணியம் என்பது பாலினம், பாலின வெளிப்பாடு, பாலின அடையாளம், வெளிப்பாடுகள் பற்றிய கருத்து உருவாக்கங்களினை அடிப்படையாக கொண்டவையாகும். இத்தகைய உன்னதமான விழிப்புணர்வுடன் தமிழர்கள் சங்ககாலத்தில் வாழ்ந்தார்கள். பொதுவாக பெண் என்றால் குழந்தைகளினை கருவில் சுமக்க வல்லவள், வாய்க்கு சுவையாக சமைக்க வல்லவள், குழந்தையினை பராமரிக்க வல்லவள், ஆண்மகனுக்கு அன்பு காட்ட வல்லவள், விருந்தோம்பல்



செய்ய வல்லவள் போன்ற திறன்களினை கொண்ட ஒரு வகை பாலினம் என்ற நோக்கலினையே சமகால சமூகம் கொண்டுள்ளது. ஆனால் சங்ககாலத்தில் பெண் என்பவள் எப்படி மகிமைகளுடன் இருந்தாள் என்பதனை சங்க பாக்களின் வழியாகப்புரிந்து கொள்ளலாம். உயிர்கள் மீது அன்புகொண்டவள், உணர்வுகளுக்கு மதிப்பளிப்பவள், எவ்வித அறிவாராய்ச்சியும் இன்றித் தான் கொண்டதை உறுதியாகப் போற்றும் தன்மை உடையவள், மென்மையானவள், எழில் நிறைந்தவள், இனிமையான பேசும் திறன் கொண்டவள் என்றவாறாக்ப் பெண் அடையாளப்படுத்தப்படுகின்றாள். மேலும் பதிற்றிபத்தில் (70, 14 15) பெண் என்பவள் அன்பின் உறைவிடமாய், அழகின் இருப்பிடமாய், இனிமையில் தேனாய், மென்மையின் அமைவிடமாய், பொறுமையில் பூமாதேவி போன்றவளாய் காணப்பட்டாள். பெண்ணவளின் மென்மையானது அவளை ஆளும் ஆடவரினைக் கூட தலைசாய்த்து மதிப்பளிக்க வைக்கும் என பின்வரும் புறநானூறு பாடல் வரி இயம்புகின்றது 'மென்மையின் மகளிர்க்கு வணங்கி, வன்மையின்'. சங்ககாலத்தில் பெண்கள் பல்வேறுவகையான கல்வி, கலை, பொழுதுபோக்கு, அறிவு, சமூக செயற்பாடுகளுடன் தம்மை இணைத்திருந்தனர். அதன் மூலம் பெண்களின் அறிவு, சமூக மூலதனம் போன்றவை மேம்படுத்தப்பட்ட, வலுவான சமூக பொருளாதார பண்பாட்டு விழுமியங்களுடன் கூடிய பெண்ணினம் சங்க காலத்தில் வாழ்ந்தது. பண்டைய தமிழகத்தில் வணிக மாந்தர்கள் பல்வேறு வகையான வணிகச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருமானத்தைச் சம்பாதித்தனர்.

*(முற்றும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடங்கியது பேஸ்புக்!

கொழு, மார்ச் 6 பேஸ்புக் உள்ளிட்ட சமூக வலைத்தளங்கள் நேற்று உலகளாவியரீதியில் சிறு முடக்கத்தை எதிர்கொண்டன. பேஸ்புக், இன்ஸ்டாகிராம், மேசன்ஜர் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களே இவ்வாறு முடங்கின. ஒரிரு மணிநேரத்தில் அவை மீண்டும் இயங்க ஆரம்பித்தன. முடக்கத்துக்கான காரணம் தொடர்பில் எந்தத் தகவலையும் பேஸ்புக் நிறுவனம் வெளியிடவில்லை. (ம)


## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## பகிரங்க ஏல விற்பனை

வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் பயன்பாட்டில் இருந்து நீக்கப்பட்ட பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட உள்ளன.

**காலம் :- 22.03.2024 வெள்ளிக்கிழமை**
**மு.ப 10.00 மணி**
**இடம் :- தலைமை அலுவலகம், புத்தூர்.**

**நிபந்தனைகள்:**

01. விற்பனை செய்யப்படவுள்ள பொருட்களினையும் அதன் விபரத்தினையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.
02. ஏலதாரராக கலந்து கொள்பவர் ரூபா 2000.00 மீளளிக்கக் கூடிய வைப்புப் பணமாக செலுத்தி ஏல விற்பனையில் பங்குபற்றலாம்.
03. சித்தியடைந்த ஏலதாரர் அன்றைய தினமே தங்களால் கோரப்பட்ட ஏலத்தொகையின் முழுத் தொகையையும் செலுத்தி பொருட்களை அலுவலகத்திலிருந்து அகற்றுதல் வேண்டும்.
04. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு இலக்கம்
**021 205 8867**

**செயலாளர்,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,**
**புத்தூர்.**
**2024.03.06**

(cr.41586) (N-1)


## 17ஆம் ஆண்டு நினைவுதினம்

### அமரர் பாலசுந்தரம் அஜந்தன் (வினோதரன்)



அப்பா உன் வதனம் என்
- பார்வையில்
விட்டு அகன்றதேனோ
தப்பாது எனை வழிநடத்துவீர் என
- எண்ணிய
எனை 2 வயதில் துடிக்கவிட்டு
எங்குற்றீர் என மகன்
கங்கையோடு கங்கையாக
கண்ணீரில் மிதக்கும் மனைவி
- கருணை
பெற்ற தாய். ஆஷா
நீர் நற் பிறவி எடுக்க
வேண்டுகிறோம்.

தோற்றம் 14.10.1977 மறைவு 06.03.2007

என்றும் உங்கள் நினைவில்
அம்மா
திருமதி பா.பாலா






## மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 04 . 1952



மறைவு 27 . 02 . 2024

### மயில்வாகனம் சற்குரு சிங்காரவேல் (வைமன்)

வீரபத்திரர் கோவிலடி, கோப்பாய் தெற்கை பிறப்பிடமாகவும் ஜேர்மனி எசனை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் சற்குரு சிங்காரவேல் கடந்த (27.02.2024) செவ்வாய்க்கிழமை ஜேர்மனி எசனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - குணமணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், தங்கேஸ்வரி (கிளி) யின் அன்புக் கணவரும் குயின்சியின் அன்புத் தந்தையும், வெற்றிவேல் (லண்டன்), குணசுலோசனா, காலஞ்சென்ற குணறொபிசனா ஆகியோரின் அன்புச் சகோதரனும், யோகநாயகி (லண்டன்), ஆறுமுகசாமி, காலஞ்சென்ற சண்முகராசா (ஜேர்மனி), மற்றும் வசந்தகௌரி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கனிதா (லண்டன்), கஸ்தூரி, காயத்திரி (கனடா) ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், திவ்வியா, யுகந்தன், ஜிந்துயன் மற்றும் பிரதீபா, திவாகரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.03.2024) வியாழக்கிழமை அன்று ஜேர்மனி எசனில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வீரபத்திரர் கோவிலடி,**
**கோப்பாய் தெற்கு,**
**கோப்பாய்.**

**தகவல்:**
**ஆ.குணசுலோசனா**
**(சகோதரி)**
**077 191 6624**

(CS/54258) J-1


## கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலையின் குளிரூட்டி பாராமரிப்பு மற்றும் தூய்மைப்படுத்தல் சேவைக்கான கேள்வி கோரல் - 2024-2025

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான ஆர்வமுள்ள வர்களிடம் கீழ் குறிப்பிடப்படும் சேவைக்கான முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

| தொ. இல | பெறுகை இல | கேள்வி விபரம் | தகைமை | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|
| | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | NP/DGH KOC/03/02/SA/24/AC | Maintenance & services of Air Conditioner – 121 Nos | Business Registration & CIDA Registration EM5 or abovc | 50,000.00 | 22.05.2024 |

1. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராக இருத்தல் வேண்டும் அத்துடன் அரசாங்க நிறுவனம் ஒன்றிற்கு இடையூறின்றி சேவை வழங்கியிருப்பதோடு மூன்று வருட அனுபவத்துடன் தரவு அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தகைமையினை பூர்த்தி செய்தல் வேண்டும்.

2. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை மாவட்ட பொது வைத்தியசாலை, A9 வீதி .கிளிநொச்சி எனும் இடத்திலிருந்து 06.03.2024 ஆம் திகதியிலிருந்து 19.03.2024 ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் பி.ப 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.1000.00 (வரிநீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

3. கேள்விகள் 20.03.2024 ம் திகதியன்று மு.ப 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், பிராந்திய பெறுகைக்குழு மாவட்ட பொது வைத்தியசாலை, A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் பெறுகை இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகை தர விரும்பும் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமுகத்தில் கேள்வி முடிவுறுத்தல் காலத்தின் பின் வைத்தியசாலை மாநாட்டு மண்டபத்தில் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும்.

4. நாட்டமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் மாவட்ட பொது வைத்தியசாலை கிளிநொச்சி (தொலைபேசி இல0212285329, 0212284111) எனும் முகவரியில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

5. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கும் இப்பெறுகையினை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளருக்கான பொறுப்புக்கள் எதிலும் இருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

6. கேள்வி ஆவணமானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 63 நாட்கள் (22.05.2024) வரையும் செல்லுபடியாகும்.

7. கேள்வியாளர்களுக்கான முன் கலந்துரையாடல் 13.03.2024 ஆந் திகதி பி.ப 14.30 மணிக்கு, மாவட்ட பொது வைத்தியசாலை கிளிநொச்சி எனும் முகவரியில் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெறும். இக்கலந்துரையாடலில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்துகொள்ளலாம்.

**தலைவர் பெறுகைகள் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**கிளிநொச்சி.**

(cr.42058) (N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்வன்மைப்போட்டி

யாழ். வயாவிளான் மத்திய கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் கல்லூரி மைதானத்தில் மேற்படி கல்லூரியின் அதிபர் வி.ரி.ஜயந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் வலிகாமம் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஞானலிங்கம் ஆதவன் பிரதம விருந்தினராகவும், தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வேலாயுதர் அரசகேசரி சிறப்பு விருந்தினராகவும், வலிகாமம் வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சிவலிங்கம் முரளிதரன், வலிகாமம் வலய உடற்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் நடராஜா கஜேந்திரன், பழைய மாணவர் அப்புத்துரை பாலகிருஷ்ணன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ம-66)


## விற்பனைக்கு

ஓடு, மரம், கட்டட இடிபாடுகள் விற்பனைக்கு.

077 723 2535

## THE ROYAL COLLEGE OF JAFFNA

O/L, A/L மாணவர்களுக்கு
சிறு குழுக்களாக சகல
பாடங்களுக்கும் அனுபவம் மிக்க
ஆசிரியர்கள் மூலம் வகுப்புகள்.

குபேரன் கட்டட மாடி,
பிரான்பற்று வீதி, சங்கானை.

(CS/24008) J-1

077 675 1649

## வாடகைத்தாய் தேவை

நல்ல ஆரோக்கியமான
வாடகைத்தாய் தேவை.
தங்களின் விபரம்
இரகசியமாக வைக்கப்படும்.
மேலதிக விபரங்களுக்கு

தொடர்பு:- 074 004 7586

(CS/54189) J-1

வேலணை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

## பனங்களி விற்பனைக்கு

1 போத்தல் 750 ML ஒன்று 300/- 25க்கு மேல் 250/-
5L 1700/-
10L 3300/-

மேற்குறிப்பிட்டவாறு எமது சங்கத்தில் பனங்களி விற்பனைக்கு உள்ளது என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
தேவைப்படுவோர் தொடர்பு கொள்ளவும்.

021 222 1137
077 114 1073

(CS 24007) S-1


## மரண அறிவித்தல்

### பரஞ்சோதி செல்வரத்தினம்



கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரஞ்சோதி செல்வரத்தினம் நேற்று (05.03.2024) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் மகேஸ்வரிஅம்மாளின் அன்புக் கணவரும் செல்வலோபன் (கனடா), தர்சினி (அவுஸ்ரேலியா) ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

V.C லேன், கோப்பாய் தெற்கு
கோப்பாய்.

தகவல்:
மனைவி, மகன், மகள்
077 554 0126

(CS 24014) V-1

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியர்
**திருமதி சி.கிஷோக்குமார்** அவர்களின்
அன்புத் தந்தை

**திரு. பிரான்சிஸ் அன்ரனி**

அவர்களின் பிரிவுச்செய்தி கேட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம். அன்னாரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா இறைவனில் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

புனித பத்திரிசியார் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(CS 24011) S-1

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியர் திருமதி சி. கிஷோக்குமார்
அவர்களின் அன்புத் தந்தை

**திரு பிரான்சிஸ் அன்ரனி**

அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம். அன்னாரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா இறைவனில் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் சங்கம்
புனித பத்திரிசியார் கல்லூரி
யாழ்ப்பாணம்.

CS (24010) V-1




# மணிவிழா வாழ்த்து

## திரு.அருணாசலம் மனோரஞ்சிதன்

SLTAS-1, Primary Education, Primary Trained, BA, PGDE, MEd
ஆசிரிய ஆலோசகர், ஆரம்பக்கல்வி - SLTAS-1
ஆரம்ப, இடைநிலைக்கல்வி -
யா/மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி.(தரம் 1-11)
உயர்கல்வி - யா/வசாவிளான் மத்திய கல்லூரி
(உயிரியல் விஞ்ஞானம் - தரம் 12-13)

சேவை விபரம்:

01. ஆசிரியர் - யா/ மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலை -
22.03.1990 - 02.01.2000
யா/மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி
03.01.2000 - 01.01.2008
02. ஆசிரிய ஆலோசகர் (ஆரம்பக் கல்வி) (ISA Primary)
வலயக் கல்வி அலுவலகம், தென்மராட்சி
02.01.2008 - 25.10.2015
03. உதவிக் கல்விப் பணிப்பாளர் (ADE Primary) (ஆரம்பக் கல்வி)
வலயக் கல்வி அலுவலகம், தென்மராட்சி
26.10.2015 - 25.02.2018
04. தொழில் வழிகாட்டல் ஆலோசனை அதிகாரி (CGO)
வரணி, ஆசிரியர் வாண்மை விருத்தி மத்திய நிலையம்,
வலயக் கல்வி அலுவலகம், தென்மராட்சி.
26.02.2018 - 01.01.2022
05. ஆசிரிய ஆலோசகர் - SLTAS - 1 (ஆரம்பக் கல்வி)
வலயக் கல்வி அலுவலகம், தென்மராட்சி.
02.01.2022 - 06.03.2024

அகவை அறுபதில்
மணிவிழாக் காணும் நாயகனே
ஆசிரியத்துவத்தின் உரை கல் நீரன்றோ
ஓய்வு காலம் சிறந்திட வாழ்த்துகின்றோம்,
பணிகின்றோம்
வாழ்க நீடூழி! வாழ்க பல்லாண்டு!

(CS 24015) A-1

இன்று 06.03.2024 அகவை 60 இல் ஆசிரிய சேவையில் ஓய்வுபெறும் மணிவிழா நாயகனை வாழ்த்துவதோடு அவர் தம் ஓய்வுகாலத்தில் சகல செல்வங்களும் பெற்று சிறப்புற வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விமானப்படையின்...

கண்காட்சிகள் இடம்பெறும் தினங்களில் விமானப் படையின் சாகச நிகழ்வுகள் மற்றும் கலைநிகழ்வுகளும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. கண்காட்சிக்கான ஏற்பாடுகள் நேற்றையதினம் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டன. இராட்சத உலங்கு வானூர்தி மற்றும் விமானங்கள் யாழ். முற்ற வெளியை வந்தடைந்துள்ளன.

இதேவேளை - குறித்த கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படும் ஜெட் விமான இயந்திரத்தைக் கண்காட்சியின் முடிவில் விமானப் படையினர் யாழ்ப்பாணப் பல்கலைகழகத்துக்கு அன்பளிப்புச் செய்யவுள்ளனர். (அ-ம-66)

# வடக்கின் பெரும்போர் ஆரம்பமாகிறது நாளை

யாழ்ப்பாணம், மார்ச் 6

வடக்கின் பெரும்போர் என வர்ணிக்கப்படும் யாழ்.மத்திய கல்லூரி மற்றும் சென். ஜோன்ஸ் கல்லூரி ஆகியவற்றுக்கு இடையிலான 117ஆவது துடுப்பாட்டத் தொடர் நாளை வியாழக்கிழமை காலை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

நாளை, நாளைமறுதினம் மற்றும் எதிர்வரும் சனிக்கிழமை எனத் தொடர்ச்சியாக மூன்று தினங்கள் இந்தத் தொடர் இடம்பெறவுள்ளது. (அ-ம-66)

# எம்.பி.யானார் முத்துக்குமாரன

கொழும்பு, மார்ச் 6

நாடாளுமன்ற உறுப்பினராக எஸ்.சி.முத்துக்குமாரன சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன முன்னிலையில் நேற்றுப் பதவியேற்றார்.

பதவியேற்றதன் பின்னர், நாடாளுமன்ற பதில் செயலாளர் நாயகம் சமிந்த குலரத்ன முன்னிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஏட்டிலும் அவர் கையொப்பமிட்டார்.

பொதுஜன பெரமுனவை அநுராதபுர மாவட்டத்தில் பிரதிநிதித்துவப்படுத்திய உத்திக பிரேமரத்ன தனது பதவியை இராஜினாமாச் செய்ததையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே எஸ்.சி.முத்து குமாரன நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ-ம-44)

## நாவற்குழியில்...

நிலையத்துக்குச் சொந்தமான திருவாசக அரண்மனைக்கு அருகாமையில் இருந்தே மேற்படி கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து, கைக்குண்டைச் செயலிழக்கச் செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (அ-ம-100)

## முருகன்,...

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் சாந்தன் சார்பில் சட்டத்தரணி புகழேந்தி பல ஆண்டுகளாக வழக்காடியிருந்தார். சாந்தன் உயிரிழந்த பின்னர் அவரின் உடலை இலங்கைக்குக் கொண்டுவருவதற்கான அனைத்துச் சட்ட ஏற்பாடுகளையும் செய்த சட்டத்தரணி புகழேந்தி, சாந்தனின் உடல் புதைக்கப்படும் இறுதி நிமிடம் வரையில் உடனிருந்தார். இந்த நிலையில், யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிறப்பு முகாம் என்பதே மரணக் கொட்டடி ஆகும். சாந்தன் இறப்பதற்கு மூன்று வாரங்களுக்கு முன்னர் அங்கிருந்த மற்றொருவர் உயிரிழந்தார். அந்த முகாம் மூடப்படவேண்டும். அங்கிருப்பவர்கள் உடன் வெளியிடங்களுக்கு மாற்றப்படவேண்டும். முன்பு அது பெண்களுக்கான சிறையாக இருந்தது. இன்று அதன் பெயரை சிறப்பு முகாம் என்று மாற்றியுள்ளனர். மற்றப்படி அது சிறைதான். இங்கு பல்வேறு கட்டுப்பாடுகளைத் தற்போது விதித்துள்ளனர். பல பாதுகாப்பு வேலிகளை அமைத்து இந்த மூவரையும் தடுத்து வைத்துள்ளனர். சாந்தன் 32 ஆண்டுகள் மனஉறுதியுடன் சிறையில் இருந்தார். ஆனால், ஒரு வருடத்துக்குள் அவர் திருச்சி சிறப்பு முகாமில் மன நோயாளியாக மாற்றப்பட்டார். உடல் அளவிலும் செயற்பட முடியாத அளவிற்கு மாறினார்.

சிறப்பு முகாமின் வடிவமைப்பு என்பது மிகவும் கொடுமையானது. இந்நிலையில், அங்கிருக்கும் முருகன், ரொபேட் பயஸ் மற்றும் ஜெயக்குமார் ஆகியோரை உடன் மீட்கவேண்டும். அதற்கு இலங்கையில் இருக்கக்கூடிய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முயற்சி எடுக்க வேண்டும். தமிழகத்தில் இருக்கும் அரசியல் கட்சிகளுக்கு நாங்கள் அழுத்தம் கொடுக்கின்றோம். இரு தரப்பினரும் இணைந்து செயற்பட்டு அங்கிருக்கும் மூவரையும் காப்பற்றவேண்டும். அதற்காக நான் அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றேன்.

தன்னை இலங்கைக்கு அனுப்பிய பின்னர் எனக்கு எப்படி வரவேற்புக் கிடைக்கும் என்பதை நீங்கள் பார்க்கமுடியும் என்றுசாந்தன் என்னிடம்கூறியிருந்தார். அதனை அவரின் மரணத்தில் மூலம் கண்டுகொண்டேன். அவர் மீது மக்கள் எவ்வளவு பற்று கொண்டிருந்தார்கள் என்பதை அறிந்துகொண்டேன். அதை நினைத்து நான் பெருமைப்படுகின்றேன் - என்றார். (அ-ம)

## எஞ்சியிருக்கும்...

அனுப்ப துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இந்திய மத்திய அரசுக்கு உத்தரவிடவேண்டும் என்று உயர் நீதிமன்றத்திடம் தமிழக அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

சாந்தன் உயிருடன் இருந்த காலப்பகுதியில், இலங்கையில் நோய்வாய்ப்பட்டுள்ள தனது தாயாரைப் பார்க்கச் செல்வதற்கு அனுமதிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்து சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார். இந்த மனு மீதான விசாரணை நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன் போது, சாந்தன் உயிரிழந்தமை தொடர்பான ஆவணங்களையும், அவருடைய திருவுடலை இலங்கைக்கு அனுப்பியமை தொடர்பான ஆவணங்களையும் தமிழக அரசு தாக்கல் செய்தது. இதையடுத்து, சாந்தனால் தொடரப்பட்ட அந்த மனு மீதான விசாரணைகள் முடித்து வைக்கப்படுவதாக உயர்நீதிமன்றம் அறிவித்தது.

இதன்போதே, சாந்தனுடன் சிறைவாசம் அனுபவித்து பின்னர் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டு திருச்சி சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ள இலங்கையைச் சேர்ந்த ஏனைய மூவர்களான முருகன், ரொபேட் பயஸ் மற்றும் ஜெயக்குமார் ஆகியோரை இலங்கைக்கு அனுப்ப துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இந்திய மத்திய அரசுக்கு உத்தரவிடவேண்டும் என்று தமிழக அரசு உயர்நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழக அரசின் இந்தக் கோரிக்கைக்கு, மத்திய அரசின் பிரதிநிதியாக நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்த கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஏ.ஆர்.எல்.சுந்தரேசன், "மூவரும் தங்களுக்கான ஆவணங்களை வழங்கக்கோரி இலங்கை தூதரகத்தை நாடினார்களா என்பது குறித்து தெரியவில்லை" என்று கூறினார்.

இதையடுத்து கருத்துத் தெரிவித்த நீதிபதிகள், "சாந்தன் தாக்கல் செய்த வழக்கில், ஏனைய மூவரையும் இலங்கைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிடமுடியாது. சிறப்பு முகாமில் உள்ள முருகன், ரொபேட் பயஸ் மற்றும் ஜெயக்குமார் ஆகியோர் தனித்தனியாக மனுத்தாக்கல் செய்யப்படும் பட்சத்தில் அது தொடர்பில் நீதிமன்றம் பரிசீலிக்கும்" என்று தெரிவித்தனர். (அ-ம)

## நாடாளுமன்றில்...

சார்ள்ஸ் நிர்மலநாதன் மேலும் தெரிவித்ததாவது:-

"சாந்தன் என்ற ஒரு நல்ல மனிதரை இலங்கை மற்றும் இந்திய அரசுகளின் அக்கறையின்மையால் இழந்துவிட்டோம். அவரின் உயிர் பறிக்கப்பட்டுள்ளது. ராஜீவ்காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு கடந்த 30 வருடங்களுக்கு மேலாக சிறையில் இருந்து, பல்வேறு போராட்டங்களுக்கு மத்தியில் 2022இல் அவர் விடுவிக்கப்பட்டார். எனினும், அவர் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பவில்லை. மாநில அரசின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள திருச்சி சிறப்பு முகாமில் சாந்தன் அடைக்கப்பட்டார்.

ராஜீவ்காந்தி கொலைவழக்கில் சிறையிடப்பட்ட ஏழு பேரில் நால்வர் இலங்கையர். மூவர் இந்தியர்கள். இந்தியர்கள் தற்போது வழமையான வாழ்க்கைக்குத் திரும்பியுள்ளனர். ஆனால், ஈழத்தமிழர்கள் தொடர்ந்தும் சிறப்பு முகாமுக்குள்ளேயே அடைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் குடும்பத்தினர், வெளிவிவகார அமைச்சருக்கு ஒன்றரை வருட காலப்பகுதிக்குள் மூன்று தடவைகள் கடிதம் அனுப்பியுள்ளனர். இலங்கைப் பிரஜை என்பதை உறுதிப்படுத்தி, அவரை நாட்டுக்குக்கொண்டுவருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. ஆனால், இலங்கை - இந்திய அரசாங்கங்களின் அசமந்தப் போக்கால் சாந்தனின் உயிர் இன்று காவுகொள்ளப்பட்டுள்ளது. அவருடைய இறப்புக்கு இரண்டு நாடுகளும் பொறுப்பேற்கவேண்டும் - என்றார். (அ-ம-44)

## சுகவீனத்தால்...

ரவிநாதன் ஆரவ் என்ற நான்கு மாதக் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது. சளியால் பாதிக்கப்பட்டிருந்த அந்தக் குழந்தை, கடந்த 27ஆம் திகதி மந்திகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு நேற்றுக் காலை மாற்றப்பட்டுள்ளது. நேற்று மாலை குழந்தை உயிரிழந்தது. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## மன்னாரில்...

விபத்துத் தொடர்பில் தெரியவருவதாவது:- வடக்கு - கிழக்கு தமிழ் மறைமாவட்ட குருக்களுக்கான தவக்காலத் தியானம் மன்னார் மடு தேவாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் பங்கெடுத்துவிட்டுத் திரும்புகையிலேயே டிப்பர் வாகனத்துடன் இடம்பெற்ற விபத்தில் அவர் உயிரிழந்தார். விபத்தில் படுகாயமடைந்த அவர் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார். விபத்துத் தொடர்பான விசாரணைகளை அடம்பன் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-56)

## அழுகிய...

யில் இருந்து, முதியவர் ஒருவரின் சடலம் அழுகிய நிலையில் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

கைவிடப்பட்ட அந்த நீர்நிலைக்குள் சடலமொன்று இருப்பதை அவதானித்த பொதுமக்கள் அது தொடர்பில் ஓமந்தைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார்கள். இதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டதுடன், மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்தனர். சடலத்தை அடையாளம் காணும் நடவடிக்கைகளும், உடற்கூற்றுப் பரிசோதனைக்கான நடவடிக்கைகளும் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-110-18)

## பலாலி...

பலாலி விமான நிலையத்தின் ஊடாக, தற்போது 'அலையன்ஸ் எயார்' விமான சேவை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையில், ஜுன் மாதம் முதல் 'இன்டிகோ' விமான சேவையும் பலாலி ஊடாக இடம்பெறவுள்ளமைக்கான சாத்தியக்கூறுகள் உள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (அ-ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்பொழிவும் குருபூசையும்

சைவ வாழ்வியலில் பெரியபுராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவஸ்ரீ. பால.திருகுணானந்தக்குருக்கள் நடத்தும் வாராந்தப் பெரியபுராணச் சிறப்புச் சொற்பொழிவு மற்றும் நாயன்மார் குருபூசை நிறைவு விழா என்பன சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளன. சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் 'பெரிய புராணம் காட்டும் சிவனடியார் பெருமை' என்னும் விடயப்பொருளில் சைவப்புலவர் செ. த. குமரனின் சொற்பொழிவு இடம்பெற்று, அதிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா. தனபாலன், சொற்பொழிவாளர்கள், ஆலய நிர்வாகத்தினர்கள், ஆசிரியர்கள் எனப் பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (ப)

# திருவள்ளுவர் மகாசபை புதிய நிர்வாகத் தெரிவு

*யாழ்., மார்ச் 6*

அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபையின் இந்த ஆண்டுக்கான புதிய நிர்வாக தெரிவுக் கூட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சுன்னாகம் றோ.க.த.க. பாடசாலையில் மகாசபை தலைவர் நாகன் கிருஷ்ணபிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ளது.

கூட்டத்தில் சகல பொதுச் சபை உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)


## விற்பனைக்கு

**தளபாடங்கள் விற்பனைக்குண்டு.**

**077 040 2317**

(cs54254) (M-1)

## வாடகைக்கு

கல்வியங்காடு மூன்றாம் கட்டையில் உள்ள கடையும் கடைக்கு மேல் தளத்தில் உள்ள வீடும் வாடகைக்குண்டு.

**077 1750746**

## வாடிக்கையாளர்களுக்கான அறிவித்தல்

963A KKS வீதி, தட்டாதெருச் சந்தி, **யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கண்ணன் எலக்ரோனிக்ஸ் தொடர்ந்து இயங்க முடியாமையால்** வாடிக்கையாளர்கள் 30.03.2024 திகதிக்கு முன்னர் திருத்துவதற்காக எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட தங்களுடைய **இலத்திரனியல் பொருட்களை** பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

உரிமையாளர்: **077 465 6325**

(CS54261) J-1

ஏசியன் தளபாட நிலையம் வழங்கும்...

## மாபெரும் மலிவு விற்பனை!

மார்ச் 6.7.8.9.10 ஆம் திகதிகளில்
காலை 10 மணிமுதல்
இரவு 10 மணிவரை
யாழ் முற்றவெளி மைதானத்தில்!

**021 222 7892 - 076 821 9416**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் உரும்பிராய் சந்தியிலிருந்து கோப்பாய் செல்லும் பிரதான வீதி முகப்புடன் நான்கு (04) நிலப்பரப்புக் காணிவிற்பனைக்கு உண்டு. சகல ஆவணங்களுடன். சிவப்பு மண், நன்னீர் ஊற்று, கிருஷ்ணர் கோவில் அருகாமை. தரகர் தேவையில்லை.

(CS 28078) S-1

**077 638 5683, 075 638 5684**


# கண்ணீர் அஞ்சலி



எமது ஆலயத்தின் முன்னாள் முகாமையாளராகிய

**கந்தையா கதிரேசு**

**(ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்தின் முன்னாள் உப அதிபர்)**

அவர்களின் மறைவிற்கு அன்னாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தர்மகர்த்தாக்கள்,
முகாமையாளர்கள்,
ஆனைக்கோட்டை மூத்தநயினார் கோவில்

(CS 24017) S-1

# மரண அறிவித்தல்

பிறப்பு 09 . 08 . 1945



இறப்பு 05 . 03 . 2024

## பிரான்சிஸ் அன்ரனி

**(ஓய்வு பெற்ற மின் பொறியியலாளர்)**

கரம்பொன் கிழக்கைப் பிறப்பிடமாகவும் புனித அந்தோனியார் வீதி, பண்டத்தரிப்பை வதிவிடமாகவும் கொண்ட பிரான்சிஸ் அன்ரனி அவர்கள் (ஓய்வு பெற்ற மின் பொறியியலாளர்) நேற்று (05.03.2024) செவ்வாய்க்கிழமை காலை இறைபதம் எய்தினார்.

அன்னார் பற்றிமா அழகுராணியின் அன்புக் கணவரும், அமலேந்திரன் (மின் அத்தியட்சகர், மின்சாரசபை, பருத்தித்துறை), திருச்சிலுவை சபை அருட்சகோதரி றோமலா (யாழ். வேம்படி மகளிர் கல்லூரி ஆசிரியை), சியாமளா (யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி ஆசிரியை), வைத்திய நிபுணர் தனேந்திரன் (புற்றுநோய் சத்திர சிகிச்சைப் பிரிவு, யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், நிஷாந்தினி, கிஷோக்குமார் (பொது சுகாதார உத்தியோகத்தர்), வைத்தியர் பாலவள்ளி (விரிவுரையாளர், மருத்துவ பீடம், யாழ். பல்கலைக் கழகம்) ஆகியோரின் மாமனாரும், இனிதரன், கயோலின், லக்ஷனா, தனபிரியா, நித்தீஷ், கவிபிரியா, ஜயபிரியா ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான இராசநாயகம் (சூராவத்தை), மணி அக்கா (கனடா), இயேசுதாசன் (அல்லைப்பிட்டி), மற்றும் இராசாத்தி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பண்டத்தரிப்பில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு இன்று (06.03.2024) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 959 1100**

**புனித அந்தோனியார் வீதி,**
**பண்டத்தரிப்பு.**

(CS/54224) J-1

# பதினைந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 03.03.1958

இறப்பு 20.02.2009

## அமரர் அம்பலவாணர் பரமநாதன்

(பொறியியல் உதவியாளர்-
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை)

திதி : மாசி மாத அபரபக்க ஏகாதசி

அன்புள்ள அப்பா!

பதினைந்து ஆண்டுகள் பறந்து போயின
உங்களைப் பார்க்கவில்லை.
பேசவில்லை
ஆனாலும் இன்றும் எங்களோடு இருக்கின்றீர்கள்
வாழ்த்துங்கள்,
வணங்குகின்றோம்.

"திருவதிகை"
வேலாவை, அளவெட்டி.

அன்புடன்
பிள்ளைகள்



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியின் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org